[illegible]

DR. Indradevi

சுவடி எண் 311

அனுபவ வைத்தியம் கைமுறை

ஏடு எண்: 311

அனுபவ வைத்தியம்

கைமுறை

ஏடு எண் : 311

ஏட்டின் பெயர் : அனுபவ வைத்தியம் - கைமுறை

ஏடு நீள, அகலம் : 13.8 cm, 3.5 cm

ஏடு படியெடுத்த நாள் : 12.4.'96

ஏடு படியெடுத்து முடித்த நாள் : 25.4.'96

மொத்த பக்கங்கள் : 73+13 = 86

பொருளடக்க பக்கங்கள் : 13.

படியெடுத்தவர் : தா. நா

குறிப்பு: இந்த ஏட்டில் பலவகை நோய்களின் பெயர்களும், மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. முதல் இரு ஓலைகள் காணப்படவில்லை. இடையில் சில ஓலைகளும் காணப்படவில்லை. முடிவு ஓலையும் காணப்படவில்லை. மலையாள மொழிநடை கலப்புடையதாக காணப்படுகிறது.

உ

ஏடு எண்: 311

அனுபவ வைத்தியம் - கைமுறை

3. கூவிளை யதிவிடையம் கொடு~~க்ப~~பால் யருவேலி
மேவிய முத்தமொடு மெல்லிய மாதளையும்
தாவியே வகைகளஞ்சி நல்லிநீர் எட்டொன்றாக்கி
பாவியென்ற அதிசாரம் பறந்து போயவிடுமே // 3.

சகல சாரத்திற்கும் குடிநீர்:

சிற்றாமுட்டி பேராமுட்டி ஆடாதோடை
சீந்தி யருவேலி சுக்கு பற்பாடகம்
முத்தமொடு இராமிச்சவேர் செஞ்செட்டி பேய்முசுட்டை
வேர்துளசியுடனே வில்வவேரு செஞ்சொட்டி
சத்தி சிறு வழுதலைவேர் கண்டங்கத்திரியுடனே
ஓரொன்றுக் கால்பலமேதா
பேர்த்தியது நீரெட்டொன்றாக்கி குறுக்கக் காய்ச்சி
பருகிட சதுர்வாலசுரம் பறந்து போமே // 3

வேறு: சாரத்திற்கு அஞ்செண்ணெய்த்தைலம்

நல்லெண்ணெய் வேப்பெண்ணெய் இலுப்பையெண்ணெய்
ஆமணக்கெண்ணெய், புங்கெண்ணெய் ஆக அஞ்செண்
ணையும், ஆடாதோடை, பிசலகு எருக்கு முருக்கிலை
எலிமுள்ளிவேலி, நொச்சியுடனே யது வகை 1-க்கு
உடிக்கிச் சாறும் முருங்கைப் பட்டையுடன் அரைத்து
மிளைவின்றே இவை ~~பிசிக்க~~ வடித்து அனைத்தி நெற்றி
யிலும், கொடபாட வட்ட அத்திலும், உச்சிக்கும்
யருகெ. தலக்குத்து நிற்கும்.

மாறலின் குளிகை:

துத்தம் பலம்-1, துரிசு பலம்-1, வெள்ளைப்பாஷாணம் பலம்-1/3, இவைகள் உமத்தின் சாற்றிலரைச்சு மிளகு பிரமாணம் உருட்டி உணவினியால் வழப்பழத்தில் பொதிந்து கொடுக்க நாலாம் மாறல் சமிக்கும். நிச்சயம்.

பனிக்கு மாற மருந்து:

சாவுகு புளியபத்தின்றே வேறு அரைச்சு பசுவின் பாலில் குடிக்கத் தண்ணீரிலும் குடிக்கலாம். பனி நிக்கும்.

ஆவணக்கம் வேர் அரைச்சு இளவென்னீரில் கொடுக்க பனி சமிக்கும்.

வாயிலக்கும், வயற்றுப் போக்கிலும் மருந்து:

சுக்கு, திற்பிலி, ஓமம், கொத்தமல்லி, நெல்லிப்பருப்பு நல்சீரகம், கிராம்பு, பத்திரி அதிவிடையம், அமுக்கிரா வாயிவிளங்கம், இது ஒரொன்று கழஞ்சு-3. யாதை சோ பொன்னிறமாக வறுத்து பொடிச்சு சீலை வடிகொண்டு தேனில் குழைத்து கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும் வாயிலும், வயிற்றுப் போக்கும் சமிக்கும்.

வயிற்றில் செத்த பிள்ளை விழ:

வேலிப்பருத்தி வேர், பெருங்காயம் பலம்-1, முலைப்பால் வாத்தரைத்து வயிற்றிலும், முதுகிலும், தொப்பிளிலும் தடவ பிள்ளை விழும். கைகண்டது.

தி

சிலேட்டும குழம்பு:

திரிகடுகு தேத்தான் மணிசேரா சீரகம்
இரண்டி னோடுசேர் மதுரம் யாந்து
மேகம் சன்னிவிதை முத்தக் காசு
கறிவேட்டு நன்னாரி தாது வணைவோர்
அவைஅவை கழஞ்சாக்கி அனலிட்டு ஓடைடு
அரிதான தாராக்கி ஆவின் நெய்யில்
தெளுட னேவி செறிவிட்ட அதம்புடனே
சொந்திக் குழம்பு தின்ன தீரும் வியாதிகேளாய்
சிலேட்டுமம் கிரந்தி உடன் சோகிருமல்
சிக்கெண்டி நெஞ்சில் தாப்பும் காறுவிட்டு
மேலெழும்பு கண்டமாலை காயச் சுவாதமிவை
தான்கண்ட தீதுமை உண்மை யென்றுசய
மற்றவன் கண்ணனி மண்ணினானே //

அ. சுகதாதி சூரணம்:

சுக்கு, திப்பிலி, கொடுவேலி
துளசிகும் கடுக்காய் அதிவிடையம்
மிக்க அமுக்கரா வேரோடும்
மிக்கா மேபொடி யாக்கி
தக்க வெருகடி மோர்தனிலே
தானே கலக்கிக் குடிப்போய்
நிக்க வில்லை மந்தக்கிராணி
நைகை பசியும் உண்டாமே //

கண்ட மாலை, தொடாரம், இட்டம் 18-க்கும்
ஆந்த் புண்ணுக்கும் வஞ்சனை தானியத்துக்கும்.

திரிபலை தேவ தாரம்
சிறந்தவெள் ளொற்றி காயம்
செறிதரும் வயம்பு இக்கில்
செந்திரு களஞ்சி சேர
ஒரொண்டாம் அறிவாளோர்
சிவமறதாரம் அரகளஞ்கே
செழக்கு மோதம் நறுவஜியல் வெந்
நெய்யால் வெந்து
நக்க நக்க வஞ்சினைக்கு
நெய்யே நாள்தோறும் கழந்தி
நக்க கொல்ல வெயைகாறு
வயித்த கொடிய தானியங்கள் போகும்
வெல்லவே தொடாரா இட்டம்
மெனப்படும் வாயுவு நீரும்
கல்லாடையகை நாயாப் புண்ணும்
கண்ட மாலையும் போம்.

உப்பு புளிதவிர். நித்தமொலி மிளகையாலை
கூட்டிக் கொள்ளவும்.

6. பல வியாதிக்கும் உள்ளிப் பொடி:

உள்ளிப் பொடி உரி, பெருங்காயம் பலம்-1, சீரகம் பலம்-1, நெல்லிக்கவி கந்தகம் பலம்-1, சதுரக்கள்ளிப்பால் யெடுத்து நண்டுசாமம் வெயிலில் வைத்துப்

பிசின் எடுத்துப் போட்டு யிந்தபால் வார்த்தரைத்து பின்பு
நொச்சியிலை சாரகம் நாழியெடுத்து அரைத்த மருந்தை
அந்த சாரகத்தில் கரைத்து காச்சி களிபருவத்தில் யிறக்கி
வெயில்காய வைத்து நன்றாக கையினாலே பிசைப
போட்டு பொடிசெய்து பேணி வைத்துக் கொண்டு தின்று
வர தீரும் வியாதி எடுத்த வாயுவுக்கு ஒரு நேரம்
அரக்களஞ்சி பொடி தின்று வென்னீர் குடிக்கவும்.
குமக்கியானால் நாலுநாள் இந்தபடி தின்று வென்னீர்
குடிக்கவும். திமிர் வாயுவுக்கு யேழுநாள். இந்தப்படி
~~தின்று வென்னீர் குடிக்கவும்.~~ தின்னவும். சருவாங்க
வாயுவுக்கு நாலுநாள் தின்னவும். குத்து கொளுத்துக்கு
மூன்றுநாள் தின்னவும். மேல் வாற்திக்கு யேழுநாள்
தின்னவும்.. விஷ வாயுவுக்கு அஞ்சுநாள் தின்னவும்.
கபாலத்தப் பற்றின வாயுவுக்கு ஒரு கழஞ்சிப் பொடி
வேப்பண்ணை சாதித்து சீலையிலூட்டி திரித்து நெருப்பு
கொளுத்தி புகைமூக்கில் மூணுநேரம் பிடிக்கவும். ஒரு
பிடி உள்ளியும், வெந்தயம் பலம்-1, தைலக் கிருவல்
இரண்டு பிடியும் வெட்டியில் அவித்து சாறு பிழிந்து
யிந்த சாரகம்பு நாலும் ஒரு ஆக்குமட்டி அளவு
எடுத்து இந்த சாரகத்தில் நாலு மஞ்சாடி பொடிகரைத்து
இந்தப்படி யேழுநாள் தின்னவும். இதுக்கு தீரும்
வியாதி உதிரவாயிவு, மலதுடி வாயிவு, முகடிவாயிவு
அண்ட வாயிவும், மறணதுணை, வயித்துவலி,
வாறுமல், இரத்துணை, மூலவாயிவு, குன்மவாயிவு
அடிப்பக்க எரிகுன்மம் தீரும். உப்பு, புளி
தவிர்க்கவும்.

7: தலைக்குத்துக்கு எண்ணெய்:

குறுந்தொட்டிச் சாறு நாழி, பசுவின் பால் நாழி, நல்லெண்ணெய் நாழி, சாதிக்கா, சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், இலவங்கம், மக்கிரா, செண்பகப்பூ, கோட்டம் தேவதாரம், சிற்றரத்தை வகையொன்று ஒரு கழஞ்சு அரைத்து கரைத்து பதத்தில் வடித்து சிறுபயறு, சீயக்காய், ஆவாரையிலை யிட்டு முழுகவும். தலைக்குத்து வலிக்கும்.

வாதத்துக்கு தலைக்கு எண்ணெய்:

குறுந்தொட்டி வேர் பலம் - 25, 30- எட___ படி வெள்ளத்தில் இட்டு நாலு நாழி ஆக்கி வடித்து கைவிட்டு கையாந்தகரை சாறு நாழி பசுவின் பால் நாழி, ஆக்கி தேவதாரம், பலம் -½ எண்ணெய் நாழி அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து வடிக்கிற போது ஒரு கிராம்பை மிளகும் கூட்டிப் பொடித்துப் போட்டு கிண்டி வடித்து தேய்த்து முழுகவும். வாதம், தலைக்குத்து, நீர்த்தோஷம் இவை தீரும்.

விக்கலுக்கு மருந்து:

வீரவாணி பட்டும், மயிலிறகும் சீலையில் திரிச்சு பசுவின் நெய்யால் கொளுத்தி பிடிக்க தயாரம் வரும். எடுத்து தேனும் கூட்டிக் கொடுக்கவும். விக்கலும், சத்தியும் நிக்கும்.

அ. சத்தி~~க்கும்~~னும், விக்கலினும்

நற்சீரகம், மகிழம்பூ, கிராம்பு, ஏலம், திப்பிலி, சுக்கு, வால்மிளகு இவை சமன் கொண்டு ஒன்றாக வறுத்து நாழி வெள்ளம் வைத்து உழக்காகக் குடிக்கவும். சத்தியும், விக்கலும் நீக்கும்.

சகல ரோகத்திற்கும் பொடி:

வசுவாசி பலம்-1, சிறுதேக்கு பலம்-4 யாது ரண்டும் ரண்டையும் வாட்டி உணக்கிப் பொடிச்சு சீல வடிகொண்டு நாலு பலம் சர்க்கரையும் கூடச் சேர்த்து தேனில் சேவிக்க என்றால் வாதம், பித்தம், சூலரோகம், குடைகரி சொறிவீக்கம், நீர்ச்சம் பக்குத்து நிணும் நல்லது. மூருசெருந்திற்கும் நல்லது.

பீனிசத்திற்கு தகரை எண்ணெய்:

நல்லெண்ணெய் நாழி, ~~கையான்தகரை~~ கையாந்தோன்றி சாறு நாழி மாக கொடிவெற்றிலை சரகம் நாழி, பசுவின் பால் நாழி விர்க்கனிடை -1, யாது எல்லாம் ஒன்றாகச் சேர்த்து மஞ்சட்டி பலம்-4, தேற்றான் பால் பலம்-6 யாது வெட்டி உலர்த்தி யிடித்து பொடித்து யாதெல்லாம் பாலில் ~~தச்ச~~ அரைத்து எண்ணெயால் கூட்டி சேர்த்து காய்ச்சி மணல்ப் பருவத்தில் சூடன் பலம்-1/2, குமிஞ்சான் பலம்-1, இட்டு பாச்சற் பாகம் செய்து தேச்சு குளிக்கவும். மண்டை பீனிசத்துக்கும், தலைகனப்புக்கும் மூக்கில் இரத்தம் சலம் வருகிறவருக்கும், தைப்பானும் (பூசவும்) மூக்கில் நாறுத்து வதற்கும் கொள்ளலாம். (நல்லது).

8. மேலே தழுவணைக்கு பூச்சு:

கொள்ளைக் கொழுந்தை வாய் பேசாமல் பறித்து மோரில் அரைத்து பூசவும். இப்படி ஆறுநாள் காலமே பூசி அந்திக்கு தெற்றிவேரும், இவையும், கம்பும் இட்டு (போட்டு) வேது காச்சி குளிக்கத் தீரும்.

விஷநீர், மேகநீர், சொறிகரப்பன், சூலநீர் இவைகளுக்கு எண்ணெய்:

நல்லெண்ணெய் படி-1, பசுவின் பால் படி-1, இளமிச்சம் சார் படி-1, பச்ச வெள்ளம் படி-3, யாதுவெல்லாம் ஒன்றாகச் சேர்த்து திரிகடுகு, திரிபலை, கச்சோலம், அமுக்கிரா, சடாமாஞ்சி, சந்தனம் இரண்டும் அதிமதுரம், கோட்டம், சிப்பி, நாபிகணம், ஓமதம், விளாலரிசி, கிராம்பு, வால்கொடி பச்சை, கற்பூரம், இராமிச்சு, யாருவேலி, இது வகைக்கு ஒவ்வொருகழஞ்சு 2 வராகன் எடுத்து பொடித்து அரைத்த கல்க்கி சேர்த்து காச்சி மெழுகு பதத்தில் குமிஞ்சான் பலம்-1, சூடன் பலம் 1/2, பொடித்து மேல்பொடி யிட்டு வடித்து வேது வெள்ளத்தில் குளிக்க எந்நால் (குளிக்கும் போது) எல்லாத்துக்கும் நல்லது. சீரம் நன்றாக இருக்கும்.

அ. உபிரசாதி எண்ணெய்:

குன்றிதொட்டி வேர் பலம்-10, நருநண்டிக் கிழங்கு பலம்-2, பருத்திவலி பலம்-1, இராமிச்சம் பலம்-1, பசு எட்டாங்கழி வெண்ணெய்க்கு 16- எட்டாம்பாழி வெள்ளத்தில் கஷாயத்தில் விட்டு நாலிடாம்பழியக்கி எட்டாங்கழி எண்ணெயும் சேர்த்து சமன் பாலும், இளநீரும் சேர்த்துக் கலக்கி அதில் மருந்து. கொட்டம், சதகுப்பை, சந்தனம், செண்பக மொட்டு, ஏலம், இலவங்கம், வசம்பு, செவியம், செவ்வள்ளி வேர் வகைக்கு பலம் கால், அரைத்து கலக்கி வெந்து கருக பதத்தில் வடிச்சு வெண்ணீரில்.

(தொடர் ஏடுகள் இல்லை) //x

15. எலி அழைக்க:

ந்தி விரலில்த் தொட்டு தொண்டைக் குள்ளே தொட நெஞ்சிலும் தொண்டையிலும் உள்ள கபம் எல்லாம் வெளியிலே வரும். அந்த விரலில் தொட்டு அபானத்தில் உள்ளே விட பழவலங்களெல்லாம் உடனே காலு கழிக்கி போம்.

தானென்ற எலி அழைக்க விபரம் கேளு
தாரணியில் இந்திரமா கோபந் தன்னை
மானென்ற பசித்ததினை இடித்துத் தானாய்
மாவாக்கி சிமிழிலே வைத்துக் கொண்டு
ஆனென்ற தசிதனில் உருட்டிக் கொண்டு
அப்பனே விளக்கிலிட்டுத் தீப மேற்றுத்
தானென்ற எலிகளெல்லாம் வருகும் பாரு

நேராக வெளிதுங்கள் நாடிகப் பாரு //

தாசி விலக்க சீலை என்றி.

அ. தொண்டை கட்டினால் தெளிய மருந்து:

ஆலம்பழம் அரசின்பழம் அதிமதுரம் சுக்கு
யேலம் கடு கிந்துப்பொடு யேசும் பொடி செய்து
கோலம்பல தேனில் குழைத்துண்டால் சீலம்பல
பல்ராகம் உபல/சீலம் = பலராகம் //.

பித்த காமாலைக்குப் பொடி:

அதிமதுரம், திற்பிலி, நல்சீரகம், அயமோதகம்,
வயம்பு, கடுக்காய், சுக்கு, தும்பைவேர், சித்தா
மணக்கு வேர், நிலப்பனைக்கிழங்கு, கழச்சிவேர்,
வில்வவேர், பிரண்டை வேர், இது எல்லாம் வகைக்கு
பலம்-6 யடித்துப் பொடித்து சீல வடிகொண்டு
தேனில் குழைத்து வெருகடிப் பிரமாணம் ஒருநாள்
இருநேரம் தின்னவும். உப்பு, புளி தவிரவும்.
என்றால் பித்த காமாலையும், பல வியாதியும்,
காமாலையும், சோகையும் தீரும்.

கெர்ப்ப ரோகத்துக்கு எண்ணெய்:

கானவே கெர்ப்பநோய் தீரு நற்கு
கருமஞ்சள் நிலவாகை கடுக்காய் யிந்து
தோணவே கைவேளை வீளி உன்றி
சுகமான வெங்காரம் அமுக்கரா ~~தாண்~~ நந்தான்
பேணவே வகையொன்று பலமொன் றாக
பேரான ஈரெண்டத் தெண்ணை நாழி
பேணவே அடுப்பேற்றி மெழுகு போலே
வெந்த எண்ணெய் கரண்டிதினை யளவாய்க்
கொள்ளே //

கொள்ளவே வாய்வது கிருமி யேது
கூட்டிடுவாய் கிள்ளிச் சாறு குருப்பா தந்தான்
என்னாகு சேர்த்திடு கிணறு திக்கு
யேற்றிடுவாய் சூத்திரங்கள் சூட்ச மாகும்
தன்னியே மாதவிடை நாலாம் நாளில்
தப்பாது புலத்தியனே பெண்மலடோ யில்லை
கொள்ளியென்ற பயதுகளுக்கு சொன்னால் தோஷம்
கூடாராக னேமொன்று சொல்லு றேனே/

அ. குன்மம் வாயு முதலானதுக்கு:

பச்சை கொளிஞ்சி எடாம்பழி - 7, அரக்கு வடிச்ச கொடட எடாம்பழி - 3, குடத்தும்பைச் சாரகம் நாழி - 3, ஆகாசத்தாள் சீலை வடிகொண்டு நாழி - 1 வெள்ளை வெங்காயம் பலம் - 6, பலம் - 1, பசுவின்பால் பழுடி - 1, சாதிக்காய் பலம் - 3, சாதிபத்திரி பலம் - 3, கிராம்பு பலம் - 3, யேலம் பலம் - 3, யாதுக்கு செய்யெண்டும் பாகம் சொல்லாம் கொளிஞ்சி தோலு போக்கி சதைச்சு கொடையால் இட்டு புளிஞ்சு கோதிக்கி அந்த கொடையை 60 - நாழிகை வெயிலில் வைத்து எடுத்து ஆகாயத்தாமரை, தும்பறில் போட்டு விரவி உருட்டி எடுத்து முன் சொன்ன கொடயில் போட்டு வெள்ளவனால் காயவும் பாலில் போட்டு சிறுதீயெரித்து அவித்து குழம்பு பருவத்தில் அம்யாடி (கடை) மருந்து.

குறிப்பு: (தொடர்பு எடுகள் இல்லை)

26. வாதத்திற்கு எண்ணெய்:

தேய்க்க இடிக்க செய்க. யெல்லா வாதமும் தீரும்.

கள்ளி இலையும், எருக்கிலையும் இடித்துப் பிழிந்து அதில் எண்ணை விட்டு அதின் வேரு கல்க்கம் சேர்த்து காய்ச்சி தேய்க்க எல்லா வாதமும் தீரும். தரிப்பும் தீரும்.

வாதத்திற்கு ஆவிக்கு:

ஆமணக்கிலை, எருக்கிலை, புளியிலை, குருந்தொட்டி, முஞ்ஞையிலை, கள்ளியிலை, கருநொச்சி இலை, மாதளம் இலை, இவைகள் இரண்டு பிடி ஒரு பானையில் இட்டு காடியும், கோமூத்திரமும், விட்டு காய்ச்சி ஆவி காட்டுக. வாதம் எல்லாம் தீரும்.

வாதத்திற்கு பூச்சு:

கள்ளித் தண்டு அகமதுராத்து கடுக்காய், அரைத்திட்டு மண்ணு கொண்டு பொதிந்து (மூடி) சுட்டு கள்ளியிலை வாட்டி புழிந்து அரைத்து தேய்க்க வாதம் தீரும்.

வாதத்திற்கும், வீக்கத்திற்கும் எண்ணெய்:

முருங்கைப் பட்டை, சுக்கு, இலந்தைக் கொட்டை, பருத்திக் கொட்டை காடியில் அரைத்து வெதுப்பி தேய்க்க வாதம் தீரும்.

குருந்தொட்டி வேர், சிற்றாமுட்டி, தேவதாரம், இவை கஷாயம் வைத்து திரிகடுகு, கோட்டம்,

அ. சந்தனம், குந்திருக்கம், தகரம், அமுக்கிரா,
அரத்தை இவை கல்க்கமிட்டு எண்ணெய் வெந்து
தேய்க்கச் சூடும் நோவும் வீக்கமும் தீரும்.

~~சிற்றாமுட்டி கஷாயம் வைத்து~~

தலையில் ஏறிய வாதத்திற்கு எண்ணெய்:

சிற்றாமுட்டி கஷாயம் வைத்து சந்தனம், நன்னாரி, இராமிச்சம், கோஷ்டம், முத்தாங்காய், நெல்லிக்காய், செம்பருத்திக் கிழங்கு, இவைகள் கல்க்கமிட்டு எண்ணெய் வெந்து தேய்க்க தலையில் ஏறிய வாதம் தீரும்.

வாதத்திற்கு சித்தமனாதி எண்ணெய்:

குருந்தொட்டி வேர், துலாம் ஒன்று. குறுக நறுக்கி இடித்து 20- மரைக்கால் வெள்ளத்தில் கஷாயம் வைத்து அஞ்சு மரைக்கால் ஆக்கி எண்ணாழி எண்ணெயும் சேர்த்து பத்துபலம் குருந்தொட்டி வேரின் தோலியும் அரைத்து இருநாழி பாலும் விட்டுக் காய்ச்சி வடித்துக் குடிக்கவும், தேய்க்கவும் செய்தால் வாதம் கொண்டுள்ளது தீரும்.

27. எல்லா வாதத்திற்கும் எண்ணெய்:

குருந்தொட்டி வேர், சதாவேலி, முருங்கை பட்டை, மாதளங்காய்த் தோடு, எருக்கின் வேர், புங்கின் வேர், ஆமணக்கின் வேர்,

27. எல்லா வாதத்திற்கும் எண்ணெய்:

வடித்து குடிக்கவும், தேய்க்கவும் செய்தால் வாதங்கள் கொண்டுள்ளது தீரும்.

இருந்தொட்டி வேர், சதாவேரி, முருங்கைப்பட்டை, மாதளங்காய்த் தோடு, எருக்கின் வேர், புளியின் வேர், ஆமணக்கின் வேர், கருங்குறிஞ்சா வேர், அமுக்கிரா வேர், செனைப் பட்டை, செம்பரத்தின் வேரு, பாதிரி வேர், முன்னை வேர், காஞ்சுரம் வேர், எல்லாம் சமன் கொண்டு கஷாயம் வைத்து நாலொன்றாக்கி நானாழி எண்ணெயும், எண்ணாழி பாலும், எண்ணாழி தயிரும், எண்ணாழி காடியும் சேர்த்து தேவதாரம் பலம்-4, தகரம் பலம்-4, ஏலம் பலம்-2, சுக்கு பலம்-4, கடுகு பலம்-4, கூரக்கிழங்கு பலம்-4, சதகுப்பை பலம்-4, கோட்டம் பலம்-4, யாத்திப்பு பலம்-4, அரத்தை பலம்-2, அகில் பலம்-4, வசம்பு பலம்-4, கொடுவேலி வேர் பலம்-4, மாஞ்சி பலம்-3, கடுகுரோகணி பலம்-2, இவை சால கலக்கவிட்டு மெலாக்கினியாய் எரித்து பதத்தில் வடித்து தேய்க்க குடிக்க நசியம் செய்க. 80-வாதமும், அதில் உண்டான வியாதி எல்லாமும் அந்திரவும் தீரும்.

எண்பது வாதத்திற்கும் எண்ணெய்:

எருக்கிலம் பால் ஆழாக்கு, கள்ளிப்பால் ஆழாக்கு, புளியாலச்சாரம் ஆழாக்கு, அச்செண்ணையும்

கட்டி வெள்ளுள்ளி, வசம்பு, ஒரு கொஞ்சம் அரைத்து கலக்கி கருகு பதத்தில் ஒரு உமிழ்நீரின் வேணும் தல்லிப் போட்டு காச்சி வடித்து தேய்க்க ஒரு காசளவு அஞ்சு நாள் குடிக்க வாதம் ~~என்பதும்~~ என்பதும் தீரும்.

பெண்களுக்கு (இரத்தம் போக்கிற்கு (குருதி)) நாரிகளுக்கு சோர சொரியுறதிற்கு மருந்து:

(வெந்தயம்)
உ—வாயும், அரியும், சமன் கொண்டு வறுத்து கோவைப் பாலில் கருத்த சக்கரையும் பொடியும் கூட்டு கிண்டி குறுக்கி ரெண்டு நேரமும் கொடுக்க இரத்தம் வடிகிறது நிற்கும். இது கண்டது. ~~இது~~ இது வகைக்கு உப்பு ~~பச்சு~~ வேணும்.

26. வாதத்திற்கு எண்ணெய்:

28. தீண்டா யிருப்பதற்கு:

தென்னம்பூக்கள் கஷாயம் வைத்து பஞ்சார (சீனி சக்கரை) பிறகு பொடியிட்டு குடிக்கத் தீண்டா யிருக்கும்.

கருகின் இடது தாவலின் இடதுக்கால் பெருவிரலில் கட்டுக இருக்கும்.

சந்தனமும், செம்பருத்திப் பூவும் சமன் ½ கொஞ்சி கொண்டு நாழிப் பாலும், நாழி வெள்ளமும் வைத்து பாலாகும் போது குடிக்க இருக்கும்.

சந்தனமும், இலவின் இலையும், ~~கீழா~~ முளையிலையும் (பிளாவிலையும்) தொலியும் இவைகள் கஷாயம் வைத்து குடிக்க முடிக்கும். இலவிலே

~~யின்விஷே இலைதாக்கிக்~~

இல்வியாலை நான்றிக்காயளவு அரைத்து நல்லெண்ணையால் கலக்கி குடிக்க யாறிக்கும். நாவஞ்சு செம்பருத்திப் பூவும், தின்ன இருக்கும். பகளம் தண்ணீரில் கலக்கி குடிக்க இருக்கும். பாலக்கொடி பச்சையும், மஞ்சக்கொடி பச்சையும் சமன். கொண்டு பனிநீரில்க் கொடுக்க இறப்போம். கோழி முட்டைத் தோடு பொடித்து கோழி (ஆணத்தில்) (குழம்பில்) இட்டு கொடுக்க யேறப்போம். சிறுதேனில் இரண்டு கழஞ்சி சுக்கு அரைத்து கலக்கிக் கொடுக்க இறப்போம்.

சுரோணிதம் விட்டுப் போக!

என்று பலம்-4, கடுகு களஞ்சு-4, காயம் பலம்-1; யிவை கசாயம் வைத்து 3-நேரம் குடிக்கப் போம்.

சுக்கு பலம்-1, மிளகு பலம்-1, கடுகு பலம்-1/4, ஓமம் பலம்-1/4, அரத்தை சந்தனம் பலம்-1/4, கடுக்காய் பலம் 1/4, சாத்திரபேதி பலம்-1, கிரிமி-பலம்-1 யிவை பொடி செய்து ஆமணக்கெண்ணையில்விட்டு கிண்டி குழம்பாக்கி 9-நாள் 18-நேரம் ஒரு சுண்டைக்காயளவு தின்ன சுரோணிதம் விடும். வெடியுப்பு கால்களஞ்சு அரைத்து அரை உழக்கு நல்லெண்ணையால் கலக்கி குடிக்க ஒரு நேரம் பிணை கிடந்தாலும், கரைந்து போம்.

29. பெண்களுக்கு துவாலை இரைப்பு தீர்க:

நல்லெண்ணெய் நாழிக்கு ஈர உள்ளி நாலணாவிடை. யிடித்து ஒரு கருக்குவெள்ளம் (கிளாசில்) பிழிந்து அரித்து கொதிக்கில் போட்டு சாகம் எண்ணெயில் கூடச் சேர்த்து காச்சி வெள்ளம் வத்தி வரும்போது வெள்ளைக் குந்திருக்கம் ஒரு பலம் நன்றாக மைபோலே பொடித்து கூடத் தூத்தி (தூவி) கிண்டி கரியாதே யும், கட்ட பிடிக்காதேயும் பாகத்தோடே பாத்து தயிர் பருவத்தில் இறக்கி ஏழுநாள் 14- நேரம் பலாயிலை அளவு நெய்குடிக்க பிடிக்கும் (தீரும்) கை கண்டது.

சூலை குன்மத்தின் குணமும், குடிநீர்:

சாரமுடன் உதிரந் தன்னில்
தோன்றிடும் மந்திரச்சி யாக
உரமிகப் பிறண்டு வாயிறு
நெறியே நெஞ்செரித்து
வரமிக காந்தி போலும்
மனக்கிடுத் திருதல் கண்டால்
சாரமுறு சூலை என்னச்
சொல்லுவ தன்மை தானே //

குடிநீர்:

உண்டி சேர மறுத்து
வாயிறு ஊறி நெஞ்செரித்து பத்தி
பத்தி மென்றிய சாத்தோ டொக்க
வயிற்றினில் திரண்டு தோன்றும்
தண்டியே திரண்டு வேற்புத்
திணியவே அகத்த டங்கும்
அண்டத்தின் வேதம் பேசும்
அதிசார சூலை யாமே //

அ. இருக்கு குடிநீர்:

பாகம் பாளை வேர்க்கொம்பு
பருத்த முத்தக் காசுடனே
அங்கஞ் சொறியு மதின்வேரும்
அடவே குடிநீர் பருகிடுகில்
பொங்கிச் சொறியும் தினவெல்லாம்
பொல்லா தென்னும் நீரைட்டும்
பாங்குப் படாதே இருநீரும்
(வெட்டும்)
பாரீர் இதனைப் பாரீரே!

30. சுவப்பிர மேகத்துக்கு:

அமிர்தவள்ளி களஞ்சி - உ, யேலம் பலம் - 2, கருஞ்சீரகம் பலம் - 2, வட்டச் சாணத்திவேர் பலம் - உ, யிவை எல்லாம் மூன்றுநாழி வெள்ளம் வைத்து உரியாக்கி ஒரு நேரத்துக்கு ஒரு சிறாங்கை விட்டு கூட்டி தேனும் விட்டு 3 - நாள் குடிக்கவும். உப்பு, புளி தவிரவும். சுவப்பிர மேகம் தீரும்.

நல்லெண்ணெய் ஒரு சிறாங்கை, கோழிமுட்டை வெள்ளைக் கருவும், கருப்புக்கட்டி ஒரு யதுமிச்சம் பழத்தளவு, புகையூறல் ஒரு களஞ்சி யிவை எல்லாம் கலக்கி கொஞ்சம் நல்ல அன்னாம்பும் கூட்டி நன்றாக ரேகிச்சு கலக்கி மூன்றுநாள் குடிக்கவும். சுவப்பிர மேகம் தீரும். கை கண்டது.

செங்க மாரிக்கு:

நல்ல சிவந்த செங்கீரையை பசுவின் பாலில் அரைத்து குடிக்கவும். அருகம் புல்லை பசுவின் பாலில்

அரைத்து குடிக்கவும். கீழாநெல்லியை பசுவின் பாலிலரைத்து குடிக்கவும். தென்னம்பூ பாலில் அரைத்து குடிக்கவும். செம்பருத்திப்பூவை பாலில் குடிக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். சொஸ்கமா சமிக்கும்.

30. தொப்புள் கனத்து இரத்தம் சொரியுந்த இரணம், வாயு எல்லாத்துக்கும் நெய்:

நாழி காணம், அவித்து வெள்ளம் நாழி, ஆமணக்-கெண்ணெய் உரி, கற்றாழைச்சாறு உழக்கு, கடுக்காய் பொடி ஆழாக்கு, சிவதை பொடி ஆழாக்கு, நேர்வாளம் பலம்-1, நல்ல சீரகம் பலம்-1, திற்பிலிமூலம் பலம்-1, செறுதேக்கு பலம்-1, இந்துப்பு பலம்-1, இவைகள் மருந்த அரைத்து கலக்கி மெழுகு பதத்தில் வடித்து கொஞ்சம் சீரகம் எடுத்து கஷாயம் வற்றிச்சு அரை உழக்கு கஷாயத்தில் காசிடை நெய்யும் விட்டு நெய் (ஒழிவானம் மாதம் மந்திவஸம்) கிடைக்காத மாதங்களில் அந்திக்கும் குடிக்க பத்தியம் இல்லாத ரோகமும், கட்டியும் கரைந்து போம்.

31. மேகத்துக்கும், புழுக்கடிக்கும். மேககுருவுக்கும் பொடி:

நறுநன்றி கிழங்கு பொடி உழக்கு, நல்சீரகம் பொடி உழக்கு, அடப்பொதியன் கிழங்கு பொடி உழக்கு, சதாவேலிக்கிழங்கு அரைத்து பொடி உழக்கு, கொத்தமல்லி பொடி உழக்கு, கல்வ நீருப்பு உழக்கு, முந்திரிக்கப்பழம் உழக்கு,

யேலம் பொடி உழக்கு, மரமஞ்சள் பொடி உழக்கு, கார்கோலரிசி பொடி உழக்கு, தேற்றான் பால் அரைத்து உலர்த்திப் பொடி உழக்கு யிது எல்லாம் எத்தனை கழஞ்சியானாலும் சமனாகப் பொடியாக்கி பஞ்சதாரையும் நறுநெய்யும் சேர்த்து ௰ நாள் செவிக்க மேகமும், புழுக்கடியும் மேகக்குருவும் தீரும்.

பொடுகு வகைக்கு தலைக்கு நெய்:

உருக்கு தேங்காய் நெய், உரி, நீரைட்டி நெய் உரி, மரமஞ்சள் தொலி, அரத்த சந்தனம், சீரகம், இரண்டும் யேலம், மஞ்சள் வகைக்கு பலம் ½ பொடித்து சேர்த்து மொரியும் போல் யிறக்கி கருத்தில் தேய்க்கவும்.

~~அவிக்கலுக்கு நெஞ்சில் தாவாணைக்கு மருந்து:~~

நெல்லிக்காய் பருப்பு பசுவின் பாலில் அரைத்து வெதுப்பி தலையில் மத்தித்து குளிக்கவும். மேகமும், புழுக்கடியும், மேகக்குருவும் தீரும்.

விக்கலுக்கு நெஞ்சில் தாவாணைக்கு மருந்து:

பச்சைத்தவளை கொண்டுவந்து ஒரு களஞ்சி கல்பூரமும் கூட்டி முலைப்பாலிலரைத்து நெஞ்சில் தாவாணையிடவும். விக்கல் தீரும்.

சிறயாங்கீழ் அயதோரரான வைத்தியன் குருவசனமாக பிறபின் வைத்தியர் ஏட்டில் உள்ளது.

பெற்றவளுக்கு மூத்திரப்பெட்டி அற்று போனால் பொறுக்க:

உலர்ந்த மஞ்சளும், ஈரவுள்ளியும் அரைத்து யோனியில் வைத்து மூன்று நாள் கட்டவும். சதை வந்து மேவி மூத்திரக்கிரிச்சம் நீக்கும். புண் ணாக ~~கொள்ள~~ இருந்தால்.

(தொடர் ஏடு 32-ம் ஓலை இல்லை)

33. விப்புருதிக்கும், ஆந்திர வாயுவுக்கும் குழம்பு:

கோட்டம், காந்தம், வயம்பு, வெளி கழற்றி ஆமணக்கெண்ணெய், பாவட்டை யாதுமெல்லாம் ஒரு நிறையாக எடுத்து குழம்பாக்கியும், ஆறணமக்கி நூம் குடுக்க விப்புருதி, ஆந்திரவாய்வு இவை சமிக்கும்.

பிளவைக்கு பூச மருந்து:

தேவதாரம், நித்திரை மரமஞ்சள், நாகசணம், சிறுபவெள்ளம், கோட்டம், ரசாணி, சன்னிநாயகம், அகில், நாவல் மரப்பட்டை, பச்சை குங்கிலி; குமிஞ்சான், கிராமிச்சம், குங்கிலியம் யாது எல்லாம் அரைத்துப் பூச புனை பிளவை ~~நீக்கும்~~ சமிக்கும்.

உள் வெவ்வுக்கும், நெஞ்செரிப்புக்கும்:

நறுநண்டி கிழங்கு நாலுபலம், கருந்தொலியும், நரம்பும், எடுத்து விட்டு அதை அரைத்துருட்டி உழக்கு சீரகம் அரைத்துருட்டி அந்த ~~அடிக்கு~~ அளவு

சந்தனம் அரைத்து உருட்டி இந்த மருந்தையெல்லாம் ஒன்றாய் சேர்த்து உலர்த்தி பொடியாக்கி சர்க்கரையும் நெய்யும் சேர்த்து குழம்பாக்கி நெல்லிக்காய் பிரமாணம் கொடுக்க உள் ~~இவு~~ (வெட்டையும்) வும், நெஞ்செரிப்பும் சமிக்கும்.

இக்கிளிஞ் (விக்கலுக்கு:)

மயிலிறகு, கருத்த கரும்பட்டம் நாலும் சுட்டு குளியானை ஐந்து தேனில் அரைத்து சுட்ட மருந்தில் கூட்ட குழைத்து சிறுக சிறுக இரண்டு மூன்று தரம் கொடுக்கவும். விக்கல் சமிக்கும்.

விக்கலுக்கு பூச்சு:

ஏகு குழியானை எருமை வெண்ணையில் அரைத்து நெஞ்சு குழியிலிருந்து கொப்புள் மட்டும் தடவுக. நெஞ்சுக் குழியில் நோயத் தட்டவவும்.

வெள்ளை உள்ளித் தயிலம் அரைப்பலாயிலை, முலைப்பால் அரைப்பலாயிலை, வெள்ளாட்டுப்பால் அரைப்பலாயிலை, ~~முலைப்பாலும் அரை~~ பலாயிலை, சுக்கு பொடி பலம்-5, கடுக்காய் பொடி பலம்-1/2, திற்பிலி பொடி பலம்-1/2, நற்சீரகம் பொடி பலம் 1/2, அந்த பொடிகளும், பாலுகளும், உள்ளித் தயிலமும் ஒன்றாய் கூட்டி அதில் ஏகு குழியானையை அரைத்து நாக்கில் கொஞ்சம் கொஞ்சமாகத் தடவி உள்ளுக்கும் இறக்க விக்கல் நிற்கும்.

நீராமிழிவுக்கு:

ஒரு வருசத்த காடி உழக்கு அமுறுத்து, ~~[illegible]~~ வள்ளியானை ஒருபிடி அரைத்து கொட்டைப்பாக்களவு வெண்ணையும் கூட விட்டுக் ~~[illegible]~~ கலக்கி 3- நாள் குடிக்கவும். பத்தியம் காத்துக் கொள்ளவும். நீரிழிவு சமிக்கும்.

(குறிப்பு: தொடர் வரிசை எண் 34 இல்லை)

~~கல் செருப்புக்கு: (கல்லடைப்புக்கு)~~

~~நல்ல சீரகம், நச்சுப்பலை மரத்தின் தோல், நத்தைச் சூரி வேர், நாயுருவி வேர் அரைத்து~~ அடிவயிறும், யோனிப்
35. புறத்திலும் தப்பளம் போட்டு வாழையிலையால் மேலத்திக் கிடத்தி 75 நாழிகை பொறுத்தால் இளகி, மறுநாளும் இந்தப்படி செய்து அன்றைக்கே சாயுங்காலம் கொப்புள் சுற்றி உள்ளாங்கை வட்டத்தில் ஒரு நெல் கனத்தில் நல்ல சந்தனம் அரைத்துப் பூசிக் கிடத்தி கொஞ்சம் வெந்நீர் கடுக்க காய்ச்சி ஒரு கிண்ணம் எடுத்து அந்த சந்தனத்தின் மேலே தொப்புளும் கிண்ணத்தில் தாரிலே (அடியாலே) உண்டான கண்ணும் ஒப்பமாய் இருக்கிறதாக வைத்து வெந்நீரைக் கோரி (மொண்டு) கிண்ணத்திலே விட்டு அந்த சூட்டுக் அனப்பு (சூட்டில்) வயிற்றிலே தட்டினால் வலசலம் இளகும். பிறகு பித்தாநாள் முன்சொன்ன தப்பளம் இடவும். பிறகு சூடன் பலம்-1, துருசு பலம்-1, யானை காணையிலச் (கொள்ளுயானை) சாற்றில் ஆறுநாள் அரைத்து எருநல்ல கண்ணி வெற்றிலையால் பூசி. இவந்த தொட்டாவாடி அரைத்து இலை பிடித்து இலைக்குள்ளே முட்டைத் தோடை உடைத்துப் போட்டு புடமிட்டு நீறினால் சுண்ணாம்பு ஆகும். அந்த சுண்ணாம்பும் கூட்டி யந்த வெற்றிலையால் ஒரு வெற்றிலையும் கொஞ்சம் பாக்கும் போட்டு (மென்று) சுவைத்து துப்பிப் போடவும். மத்தியானத்துக்கு முன்னர் ஒரு வெற்றிலை தின்று சாரம் இறக்கவும். சாயுங்காலம் ஒரு வெற்றிலை தின்று சாரம் கோதும், இறக்கவும். அடுத்த நாள் 3 வெற்றிலையும் அரைத்து இரண்டு கதலிப் பழத்திலும் கூட்டி ரேசித்து ~~தின்னவும்~~. விழுங்கவும்.

~~கொட்டைப் பாக்காவு வெண்ணெயும் கூட்ட~~
~~விட்டுக் கலக்கி 3 - நாள் திடிக்கவும். பத்தியம்~~
~~காத்து கொள்ளவும். நீரிலிவு சகிக்கும்.~~
~~(குறிப்பு: தொடர் ஏடு இல்லை)~~

36. சுரோணிதம் உண்டாகும். இல்லாவிட்டால் தம்பலப் பூச்சியை பொடித்து பழங்கருப்பட்டியில் கூட்டி விழுங்கவும். இசங்கிலை சாரத்தில் அரைத்து கழுத்தின் கீழெங்கும் தவளை இடவும். முன் சொன்ன தப்பளம் இரண்டு பல்லாயாதும் (விலாவிலும்) கூட்ட இடவும். யாது நல்லது.

<u>வனகரு மருந்து:</u>

கொத்தாமையை பிடித்து மேத்திக் கிடத்தினால் கழுத்தை நீட்டும். அதின் கிட்ட ஒரு கரும்பனைக் கோழியை கட்டினால் ஆமையை கொத்தும். இப்படி இரண்டு நாள் கொத்தினால் அந்திக்கும் கொத்தினால் உடனே ஆமை கழுத்தை வளைத்து அறுத்து அந்த இரத்தவும். கோழியும் உடனே அறுத்து அந்த இரத்தமும் ரேகிச்சு துருசு ஒரு மஞ்சாடிக்கு இந்தப்பு எட்டு மஞ்சாடி உடனே பொடித்து ரெத்தத்தில் போட்டு கலக்கி அந்த இரத்தம் வெள்ளிக் கிழமைக்கு செய்து கொடுக்கவும். காணும்.

௭. சூலைக்கும், வாத கரப்பனுக்கும், வெண்குட்டத்துக்கும் கிரந்திக்கும்,. வச்சிராங்க சூரணம்:

சமுத்திராப்பழம் பலம்-10, சுக்கு பலம் 1¼, மிளகு பலம்-5, திற்பிலி பலம்-2¼, யிதெல்லாம் யிடித்து சூரணம் பண்ணி வெருகடி தேனில் கொடுக்கவும். மறுபடி வென்னீர் விடவும். இதுக்கு தீரும் வியாதி ஒருப்பாயும் மண்டை சூலை, கிரந்தி, முடக்கு சூலை, உட்கசவு, வெண்குட்டம், பல்புண், பல்விக்கம், இவையெல்லாம் தீரும். சரீரம் பொன்னிறமாம். பத்தியம் முட்டை, முருங்கைக்காய், அவரை.

(குறிப்பு: 37-ம் எண் இலை காணப்படவில்லை)

38. அந்த சீலை புண்ணில் வைத்து கட்டி மேலே தேங்காய் நெய் காச்சி பிரட்டி வரவும். பொருக்கும் (ஆறும்).

பருவெ சுருக்க உடைவான புண்ணுகள் எல்லாத்துக்கும் நெய்:

கொஞ்சம் சுண்ணாம்பெடுத்து வெள்ளத்தில் கலக்கி கொஞ்சம் தேங்காய் நெய் விட்டு கையில் கோரி தேய்க்கவும். கையில் பற்றின வெண்ணெய் எடுத்து பிரட்டவும். உடன் பருவெ உடையும்.

உருக்கு தேங்காய் நெய் நாழி, நல்ல சாராயம் உரி, புங்கம் வேர் இழைச்சு சாரகம் உரி, காஞ்சுர வேர்ப் பூண்டு உரி, காஞ்சிரயாலை சாரகம் உரி. முற்றின சீவாந்திப் பட்டை பொடி உழக்கு, முறி பொருத்தியாலை ஒரு பிடி. அருகம்புல்லு ஒரு பிடி,

அவரிச் சாரகம் உடைக்கு. இதுக்கு துத்தமும், துரிசும்
வெள்ளை குந்திருக்கமும் வகைக்கு பலம்-1, கூடச்
சேர்த்து அரைத்து கல்க்கம் பொரியும் போது இறக்கி
புண்ணில் போடவும். யாதொரு புண்ணும் ~~ஆறும்~~
பொறுக்கும்.

அ. <u>கல்லடைப்பன், துன்மாமிசத்துக்கு மருந்து:</u>

சீனக்காரம், பொரிகாரம், சவுக்காரம் இந்துப்பு,
கருநாயுருவி, பனங்குருத்து, கதளித்தண்டு சுட்டு
பொடி செய்து தேனில் குழப்பி தின்னவும். ~~கல்லடைப்பு~~
கல்லடைப்பன், துன்மாமிசம், இவை தீரும்.

<u>கண்ணுக்கும், வாதத்துக்கும் எண்ணெய்:</u>

காடி வெள்ளம் தெளித்து புளியாலை யடித்து
சாறு படி-1, நல்லெண்ணெய் நாழி, பசுவின் பால் நாழி,
கோட்டம் பலம்-3, சித்தரத்தை பலம்-3, தேவதாரம்
பலம்-3, யிவை யடித் தரைத்து கலக்கி மணல் பதமும்
வடித்து அஞ்சனக்கல்லும், சூடமும் இட்டு வடித்து
தேய்க்கவும். கண்ணு ரோகமும், வாதமும் தீரும்.

39. <u>பறங்கி புண்ணுக்கு மருந்து:</u>

நல்ல முற்றின இலந்திப் பட்டையின் பூப்பும்,
~~அ~~ உள்ளே யிருக்கின்ற சதையும் நீக்கி இடையில்
இருக்கின்ற படையை எடுத்து நல்ல சாராயம்
விட்டு அரைத்து குழம்பாக்கி எடுத்து புளியாலை தண்
தண்ணீர் காய்ச்சி புண்ணு கழுவிப் போட்டு 3,4 நேரம்
இந்த குழம்பு போடவும். புண்ணு ஆறும். நல்லது.

காது சீழ் வடிதலுக்கு எண்ணெய்:

நல்லெண்ணெய் ஆழாக்கு, கழுதை லத்திச்சாறு, காலாழக்கு இது இரண்டையும் ஒன்றாகக் காய்ச்சி பதத்தில் வடித்து காதில் விடவும். சீழ் வடிதல் தீரும்.

இரத்தத் துவாலை நிற்க:

கஞ்சா பலம்-1, கருப்பு கட்டி பலம்-4, நல்ல சாளைக் கருவாடு பலம்-4, கஞ்சாவும், கருவாடும் நன்றாக வறுத்து கருப்பு கட்டியும் கூட்டி நல்லெண்ணெயில் அரைத்து இழம்பாக்கி ஆறு நேரம் தின்னவும். இரத்தத் துவாலை நிற்கும்.

மாதவிடாய் உண்டாக:

நாமதாளி பலம்-5, மிளகு பலம்-2, ஈருள்ளி பலம்-4, அரைத்துக் கல்க்கி குடிக்க மாதவிடாய் காணும்.

பெரும்பாட்டுக்கும், நீரிழிவுக்கும், நீர்க்கடுப்புக்கும்:

பச்சை பனங்கிழங்கை நரம்பு உரித்துபோட்டு கிழங்கை அரைத்து தேங்காய்ப் பாலில் 3-நேரம் குடிக்கவும். பெரும்பாடு தீரும்.

உமத்தரி வறுத்து பொடித்து கருப்புகட்டியில் கூட்டித்தின்ன நீரிழிவு தீரும்.

சீனை சுட்டு அபினும் கூட்டி கருப்புக்கட்டியல் தின்ன நீரிழிவு தீரும்.

ஏலம், இலவங்கம், தென்னம்பூ, இவை மூன்றும் அரைத்து இளநீர் தண்ணீரில் குடிக்க கடுப்பு தீரும்.

கல்ச்செறுப்புக்கு:

நல்லச்சீரகம், நல்லபேரால் மரத்தில் தோல், நத்தச்சூரி வேர், நாழி மோரில் அரைத்து கலக்கி காய்ச்சி உறியாக்கி குடிக்க கல்லு தெறிக்கும்.

40. எலும்புருக்கிக்கு:

காடியனுரைத்த மண்டி கல்லோடையெடுத்து நெரிய தாயெரித்து ஆடிராக்கு நல்லெண்ணையில் கலக்கி கலந்து காலத்தே குடிக்க எலும்புருக்கி தீரும்.

நீரிளிவுக்கு:

உளுந்து வறுத்து பொடித்து பொடி களஞ்சி - 1, ஆவாரம் பொடி களஞ்சி - 1, தேனில் குழைச்சு தின்னவும். நீரிளிவு தீரும்.

நீருபெருத்தால்:

ஆவாரங் கொழுந்து யானைமிச்சங்காயளவு மஞ்சாடி அபினும் கூட்டி எருமைத் தயிரில் குடிக்க நீரு மலிபடும்.

வயறு கழிய:

பருத்திப்பூ மூன்று பிடி, வெள்ளாட்டு மூத்திரத்தில் அரைத்து கலக்கி குடிக்க வயறு பேதிக்கும்.

நீரிளிவுக்கு: அத்திப்பட்டை, ஆலம்பட்டை, மருதன் பட்டை, கொன்னைப்பட்டை, அரசின் பட்டை, மாம்பட்டை, சீந்தித்தண்டு, நன்னாரிவேர், இராமிச்சம், சதாவேலிக்கிழங்கு, தென்னம்பூ, இவை

இருக அரிந்து சதைச்சு நெல்லிக்காய் பருப்பு, கடலி நாங்கிப் பட்டை, கடுக்காய், தான்றிக்காய், அதிமதுரம், நல்ல சீரகம், யேலம், யிலவங்கம், அதிவிடையம், சாதிக்காய், பத்திரி, கிராம்பு, கொத்தமல்லி, வெப்பாலரிசி, அரத்தை, சுக்கு, திப்பிலி, தேற்றான் கொட்டை, அசமோதகம், இவைகள் இரண்டு களஞ்சி யிடித்திட்டு காச்சி நாலொன்றாக்கி உழக்கு உள்ளுக்கு குடிக்கவும். தண்ணீர் எட்டுமரக்கால் வைத்து கொள்ளவும். நீரிழிவு தீரும்.

<u>நீரிழிவு, தாகம், மூத்திரகிரிச்சரத்துக்கும் மருந்து!</u>

ஆம்பன் வாழைக்காயும், முத்தின பனங்காயும், சீவியாட்டு சிவக்கக் காச்சி குடிக்க தாகம் நிற்கும். கூவளாத்து வேரும், அந்த அண்ணாம்பும்

(குறிப்பு: 41-ம் ஓலை காணப்படவில்லை)

42. அந்த அண்ணாம்பை கழஞ்சு வெண்ணையும் கூட்டி தின்ன கல்லடைப்பு தீரும்.

<u>சிறுநீர், கடுக்கயும், சுருக்கயும், செய்தாலும், ~~உஷ~~ ~~உஷ~~ணத்திலை:</u>

தேற்றான் பால் தொலி, களஞ்சு இளநீர் தண்ணீர் விட்டு பிசைந்து எடுத்து அரைத்து பஞ்சதாரையும் (சக்கரை) யேலமும் கூட்டி பொடி செய்து தின்ன கடுப்பும், சூடும் தீரும்.

வெள்ளை மந்தாரத்தின் இலை அரைத்து எண்ணையில் குடிக்க கடுப்பும், சோரையும் (இரத்தமும்) சலவும் தீரும்.

கருவேப்பின் பட்டையும், மிளகிலையும், மஞ்சள் சுக்கும் கூட்டி கசாயம் வைத்து குடிக்க. ~~செச்~~ செருப்புள்ளடி முலைப்பாலில் அரைச்சு நாவியாலத் தப்புக. பாலில் குடிக்க. சோர (இரத்தம்) விழுகில் முளையல் நெருதா அரிந்து வெள்ளம் விட்டு அரைச்சு பெரு மரத்து குருந்தும், அரைச்சு வெண்ணையில் குழைச்சு தின்ன குடிபனா வள்ளி சதைச்சு யிளநீர் வெள்ளத்தில் குறுக்கி (யேலரிசி) யேலத்தரி பொடித்திட்டு அத்தானம் உண்டால் குடிக்க தீரும்.

பித்தத்தால் ஏற்பட்ட மூத்திர கிறிச்சத்துக்கு:

பித்தத்தால் கொண்ட கிறிச்சத்துக்கு இருந்த அவிழ்தம் செய்ய காடியல் இறுத்து சதாவேலி கொண்டு கஷாயம் வைத்து குடிக்க. கல்சுரவஞ்சி, அதிமதுரம், தேவதாரம், அகில், சதாவேலிக் கிழங்கு, தர்ப்பை வேர், யிருவேலி, காட்டுத் திற்பிலி, நெரிஞ்சில், கருப்பு குறிஞ்சா வேர், பொன்னாங்காணி வேர் இவை கல்க்கமிட்டு நெய் வைத்து குடிக்க. கூட்டுகை செய்க மூத்திரக் கிறிச்சரவும், பிறமேகமும் தீரும்.

43. காக்கை வலிக்கு செந்தூரம்:

பன்றியுடைய நெருமெக்குடலை எடுத்து துட்டு களைந்து கழுவி நிறுத்து பலம்-3, வெள்ளைக்குந்திரிக்கம் பலம்-1, யிதை பொடித்து ரண்டையும் ஒன்றாக ~~சே~~ கலந்து பிசைந்து உருண்டை போல் பிடித்து ஒரு பானைக்குள்ளே வைத்து மேல்மூடி சீலைமண் செய்து 30- நாழிகை ஆறாமல் தீயாட்டு ஆறினால் திறி

செந்தூரமாகும். அதில் மூன்று வெருகடி எடுத்து தேனில் குழைத்து கொடுக்க 3. நாள் காக்கைவலி தீரும்.

மூத்திரம் அடைத்து வீங்கினதிற்கு:

கடலாடி வேர், அரைத்து பாலில் குடிக்க. பயறு கொண்டு கசாயம் வைத்து எண்ணெயும் விட்டு குடிக்க. வீக்கத்திற்கு முருங்கை வேர் கஷாயம் வைத்து சூடோடே சூட்டுடன் குடிக்க. நெருஞ்சில், மாதுளை, நாவல்காய் (இலைஉணா) எலுமிச்சம்பழம், கொடிவேலி, முருங்கைவேர், யாது கஷாயம் வைத்து திற்பிலி, மிளகு, மேல்பொடி யிட்டு குடிக்க வீக்கமும் மூத்திரம் தீரும்.

அ. பித்தம் கொண்டுள்ள மூத்திர கிரிச்சத்திற்கு:

ஏலம் பொடித்து அந்த அளவு சர்க்கரையும் கூட்டி வெந்நீரில் குடிக்க. மஞ்சள் பொடிச்சு சர்க்கரையும் கூட்டி கருநீரில் குடிக்க. கொடசப்பாலரிசி, நெருஞ்சி முந்திரிகைப்பழம், கரும்பு இவைகள் கொண்டுவந்து கஷாயம் வைத்து தேனும் பஞ்சசாரையும் (சீனியும்) கூட்டி குடிக்க பித்தம் கொண்ட மூத்திரகிரிச்சம் தீரும்.

பித்தமேகம் எல்லா சாதிக்கும்:

மஞ்சள் அரைத்து நெல்லிக்காய் சாற்றில் கலக்கி தேனும் விட்டு குடிக்க பித்தமேகம் எல்லாம் தீரும்.

44. கரப்பானுக்கு குடிக்க நெய்:

புங்கம் பட்டை, செப்பு நெருஞ்சில், சிவனார் வேம்பு, முப்புர மெரித்தான், கருஞ்சீரகம், வசம்பு, கடுக்காய், ஒரொரு களஞ்சி பொடி செய்து உரிய நறுநெய்யிலிட்டு காய்ச்சி பதமாக இறக்கி ஒரு காசளவு கொடுக்கவும். கரப்பான் தீரும்.

மண்டை — கரப்பானுக்கு:

அரளியிலை, சிறுபுள்ளடி, எருக்கிலை கொழுந்து, ஆடுதீண்டாப்பாளை, மஞ்சள் யாது சாகம் பிழிந்து மஞ்சளை அரைத்து ~~சாதமும்~~ சாறையும், மஞ்சளையும் எண்ணெயில் வெந்து வடித்து நாசியில் விடவும். மேலே போடவும். கரப்பான் தீரும்.

காய சித்திக்கு:

~~அரளியிலை, சிறுபுள்ளடி, எருக்கிலை கொழுந்து,~~

முற்றின வேப்பின் பட்டையும், காரமுள்ள மஞ்சளும் கடுக்காயும், சமனாக உலர்த்தி பொடித்து வறுத்து தின்னவும். காய சித்தியும், சரீரம் பிரகாசிக்கும்.

சதாவேரிக் கிழங்கு இடித்த நீர் பதினாறு நாழி, பஞ்சசார பலம் - பதினாறு. நெய் நாழியில் கூட்டி கொஞ்சம் தீயெரித்து, ஏலம், சுக்கு, திப்பிலி, நிலப்பனைக் கிழங்கு, பாடக்கிழங்கு நன்னாரி, நெருஞ்சில், பால்வள்ளிக் கிழங்கு, நாயுருவி வேர், கீழ்காய் நெல்லி வேர், அதிமதுரம், காவிமண், எல்லாம் இரண்டு கழஞ்சு பொடித்து நெய்யிலிட்டு கிண்டி வாங்கி நாழி கவ நீறு, 4-பலம் பஞ்சசாரையும் கூட்டி

காய்ச்சி குழம்பாக்கி பருவத்தில் இறக்கி கலசத்தில் விட்டு வாய்கட்டி நெல்லில் புதைத்து 7-ம் நாளெடுத்து சுத்தமாய் காலையில் வெறுகடி செவிக்க (உண்ணவும்). பத்தியமாக இருக்கவும். ~~சரீரம் இளைகாதே இருக்க. ஸ்ரீயிடம்~~ (பெண்ணிடம்) கூடாதே. இப்படி (மெய்ய) செவிச்சு இருக்க இருபது சாதி (வகையுள்ள) உள்ள பிரமேகமும், மூத்திர கிரிச்சமும், வாதாதிகளும், காய லேகையும் தீரும்.

45. சர்வ கட்டித்திற்கும், கரப்பானுக்கும் தைப்பனம்:

நாங்கணம், தேவதாரம், அகில், திரிகடுகு, குக்கில், குந்திருக்கம், சாதிலிங்கம், புன்னைப்பூ, நாகப்பூ, ~~யாதி~~ சமனாய் கொண்டு பொடித்து எண்ணெயில் காய்ச்சி பூசுக. சர்வ கட்டு முந் தீரும்.

குடிக்க நெய்:

திரிபலை, அதிமதுரம் தேவதாரம், அமுக்கிரா கோட்டம், சீனப்பாகு, கருஞ்சீரகம், கார்கோலரிசி, சிற்றரத்தை, நாகப்பூ, கஞ்சா வகைக்கு கழஞ்சு இரண்டு. தேங்காய் நெய் பலம்-1, அடயாலைச் சாறு எட்டம்படி கால். இந்த மருந்தை அரைத்து கலக்கி மெழுக வைத்து வடித்து தெய்க்க குடிக்க ~~கா~~ கரப்பன் எட்டு வகையும் தீரும்.

பித்தத்திற்கும், காமாலைக்கும் குழம்பு:

திரிபலை, திரிகடுகு, நற்சீரகம், கருஞ்சீரகம், அயமோதகம், இரும்பு ராக்கு, பொடி, இந்துப்பு. இது வகைக்கு பலம்-5, இதெல்லாம் கைய் தோன்றிச் சாற்றில் அரைத்து அடை தட்டு ~~கு~~ உலர்த்தி பொடி

அ. யாக்கி தேனில் -12 தினம் தின்னுக. பித்தமும், காமாலையும் தீரும்.

பித்தத்திற்கும், காமாலைக்கும்:

முன்சொன்ன மருந்தை யாச்சாற்றில் அரைத்து 1/4 எலுமிச்சங்காய் நாளாக கீறி இந்த மருந்தை துவைத்து எலுமிச்சங்காயில் பிரட்டி ஒரு தினங்கள் வைத்திருந்து ஒரு தினம் 1/4 - நேரம் தின்னவும். பித்தமும், காமாலையும் தீரும். உப்பு, புளி, கஞ்சித் தண்ணி வார்க்கவும்.

இட்டத்தினும், வெள்ளைக்கும்:

நெல்லிக்காய், கெந்தகம் பலம்-2, ஒன்றாய் இடி ங்கதி, வெளுத்த உப்பு கலக்கிக் காய்ச்சி தெளித்தெடுத்து கெந்தகமும், உப்பும் கூட்டி ஒருநாள் அரை

(குறிப்பு! 46-ம் எண் ஓலை காணப்படவில்லை)

47. தாமரை முள்ளுக்கு மருந்து:

பஞ்சதாரையும், அதிமதுரமும், சுக்கும், மாஞ்சியும், ஓராளவாயெடுத்து கீழாநெல்லி சாற்றிலரைத்து தின்னுக. மிளகிலையும், காரயாலையும், கிட்டு வெள்ளம் வெந்து இனிக்க தாமரைமுள்ளு சமிக்கும்.

பிள்ளைப் பிணிக்கு நெய்:

அதிமதுரம் பலம்-1, மாசக்காய், சாதிக்காய், கருகுரோகணி, நல்சீரகம், முந்திரிக்கப்பழம்,

புகுகு, கோரோசினை, கடவத்து, யாது சமன் கொண்டு நாழி பசுவின் நெய்யால் அரைத்து கலக்கி வைத்து வடித்து குடுக்கவும். பின்னைப் பிணி தீரும்.

குழந்தைகளுக்கு வாலேந்திரத்துக்கு தலைக்கு எண்ணெய்:

நல்லெண்ணெயும், தேங்காய் நெய்யும், கடம்பு வெள்ளப்பச்ச சாறும், கருஞ்சீரகமும், அயமோதகமும், அதிமதுரமும், விடதலையும், கடக்கடம்பு நெய்காச்சி தேய்க்க வாலேந்திரம் ஸமிக்கும். உடதலையும், விடத்தலையும் ஒன்று தான்.

உ. கழிச்சலுக்கு மருந்து:

பருத்தியிலை, ஆமணக்கின் பூ, மிளகு, உப்பு, புளியங்கலரிசி யாவை தனித்தனியே வறுத்து பொடி செய்து வெந்நீரில் குடிக்க கழிச்சல் சமிக்கும். கைகண்டது.

தாமரை முள்ளுக்குதயிலம்:

இலைக்கள்ளிச் சாறு, நாழி எருக்கின் இலைச் சாறு பூவ நாழி, அவுரிச்சாறு நாழி, பச்சை மஞ்சச் சாறு நாழி, நெல்லிக்காய், கெந்தகம், பலம் - 3, கருஞ்சீரகம் பலம் - 3, கார்கோலரிசி, பலம் - 3, வெம்பாடன் பலம் - 3, மனோசிலை பலம் - 3, தேங்காய் நெய் இருநாழி, சாகத்தில் அரைத்து கலக்கி வைத்து கற்பதத்தில் வடித்து தேய்க்க தாமரை முள்ளும், குட்டச்சிரங்கும் தீரும்.

நடநீர் பாய்ச்சலுக்கும், வெள்ளை படுகிறதுக்கும்:

சாத்திரபேதி, கல்மதம், கல்நார், கிராம்பு, வசுவாசி, அதிமதுரம், யேலம், கோரோசினம் இவை எட்டும் சரி கொண்டு பொடித்து அசுர்த சர்க்கரையும், பனிநீரும் கூட்டி குழம்பாக்கி நெல்லிக்காய் பிரமாணம் இரண்டு நேரம் தின்னுக. அத்தி உருக்கும், எலும்புருக்கும், நீர்க்கடுப்பு, செருப்பு இவையெல்லாம் தீரும்.

48. தலைசுழலுகிற பித்தத்துக்கு:

கொடுப்பை, விஷ்ணுக்கிராந்தி, மொசுமொசுக்கை, இளயத்தி வல்லாரை இது ஒவ்வொரு புடி அசுர்ந்து சுக்கு ஒரு கழஞ்சு, கடுக்காய், இது 44 காஞ்சி கசாயம் வைத்து கொடுக்க பித்தம், தலைசுழலல், காய்ச்சல் இவை தீரும்.

மேலே புளுக்கடி, படர்தாமரைக்கு:

நல்லெண்ணெய், சிறுதேக்கு, எருக்கிலம்பால் உழக்கு நெல்லிக்காய், கெந்தகம் பலம் -1/4, பாஷாணம் பலம் 1/4 இந்த மருந்துகள் பொடித்திட்டு எண்ணெயும், சாகவும் சூரிய புடம் வைத்து யெண்ணையானால் படர்தாமரை சொறிந்து மேலே பிரட்டி சாயும் காலம், மாம்பட்டை போட்டரைத்து தேய்ச்சு கழுகவும் தீரும்.

அ. ஆமை சூலைக்கு நெய்:

நெய் நாழி, வேலிப்பருத்திச் சாறு நாழி, தேங்காய்ப் பால் நாழி, கள்ளிப்பால் உழக்கு. இதை கூட்டி துளசிச் சாறு நாழி, இதை கூட்டி கருகு பதத்தில் காச்சி இறக்கி அரிசி காசளவு நக்க ஆமசூலை தீரும்.

மகோதரத்துக்கு:

அரிதாரம் பலம்-1, மிரதம் பலம்-1, நேர்வாளம் பலம்-1, கடுக்காய்-10, யாது பருத்தியிலை சாற்றில் அரைத்து பருத்திவிதையளவு உண்டை செய்து வென்னீரில் குடிக்க மகோதரம் தீரும்.

மகோதரத்துக்கு எண்ணெய்:

ஆமணக்கெண்ணெய் உழக்கு, கழுதைலத்தி தண்ணீர் உழக்கு, வெங்காரம் பலம்-½, கருஞ்சீரகம் பலம்-¼, வசம்பு பணம் ¼, யிந்த மருந்து கூட்டி எண்ணெய் காச்சி மேலால் இட மகோதரம் நீரும் வற்றிப்போம்.

49. மகோதரத்துக்கு நெய்:

நறுநெய் நாழி, யெருமைச் சாணி தண்ணீர் நாழி, கோமூத்திரம் நாழி, கள்ளிப்பாலுழக்கு, பசுவின் பால் நாழி, நேர்வாளம் பலம்-1, பொரிகாரம் பலம்-1, சிவதை பலம்-1, சுக்கு பலம்-1, திற்பிலி பலம்-1, யிவை எல்லாம் கூட்டி நெய் வெந்து வடித்து இரண்டு நேரமும் காசளவு நெய் நக்கி வரவும். மகோதரமும், ~~நீர்~~ நீரும் சாயும்.

பிரமேகத்திற்கு சதாவேலி கிருதம்:

சதாவேலிக் கிழங்கு இடித்து பிழிந்து நீர் இருநாழி,
பால் இருநாழி, தோணை வள்ளி ஒருபலம், சந்தனம்
ஒருபலம், ~~சிற்றரத்தை~~ சிற்றாமுட்டி ஒருபலம், தேற்றான் பால்
ஒருபலம், ஓரிலைத் தாமரை ஒருபலம், முத்தக்காசு
ஒருபலம், அரிசி ஆறு ஒருபலம், செங்கழுநீர்க்-
கிழங்கு ஒருபலம், ~~எல்லாம்~~ சேர்த்து கசாயம் வைத்து 1/2
படி நாழியாக்கி நெய் இருநாழியும் விட்டு
ஏலம், வெள்ளரி வித்து, காவி மண் ~~திப்பிலி~~ திப்பிலி
அ. இரண்டு களஞ்சு அரைத்து கலக்கி ~~[illegible]~~ விட்டு
ஆறிய பின் ஒரு நேரம் குடிக்கவும். நெய்யால் ~~[illegible]~~ சீனி
யும், தேனும் கூட்டிக் குடிக்க பிரமேகம், கிரிச்சரம்,
மூத்திர தோஷங்கள் எல்லாம் தீரும்.

விசத்திற்கு பொடி:

எருக்கம்பால் உழக்கு, ஒரு புதுச் சட்டியில்
விட்டு நிழலிலுலர்த்தி முக்களஞ்சு காயம் இட்டு,
சட்டியை காய வைத்து, மேற்காட்டப்பட்ட சரக்கை வைத்துப் பொடி செய்து சிமிழில்
வைத்துக் கொண்டு காசளவு பொடி யெடுத்து கிழியிலிட்டு
பெண்ணுக்கு இடது நாசியிலும் ஆணுக்கு வலது
நாசியிலும் ஊத யாருவிரல் உள்ள ஊதல்கள் ?
விஷமும் தீரும்.

விசத்திற்கு உள்ளே கொடுக்க:

வெள்ளருகு வேர் பலம்-1, சிவனார் வேம்பு வேர்த்
தோல் ~~தோல்~~ தொலி பலம்-1, அழிஞ்சில் வேர் ~~[illegible]~~ தோல் பலம்-1,
வசம்பு பலம்-2, சைம்பன நெருஞ்சி வேர் பலம்-1,

50. இவைகளை உலர்த்தி பொடி செய்து, அத்துடன் 1உ- கொஞ்சு காயக் வைத்துப்பா பொடித்து சலித்து வைத்துக் கொண்டு வெருகடி அளவு பொடி தின்ன இருந்திடும், குடிக்க யேறின குலத்துக்கு வெந்நீர் குடிக்க சகல விஷமும் தீரும்.

தோடக, எரிதோடக அக்கி விஷத்துக்கு!

பருத்திக் கொழுந்தை தண்ணீர் விட்டரைத்து பூசத் தீரும். ஆவாரை இலை தண்ணீர் விட்டரைத்து எருமை வெண்ணையால் பூசத் தீரும்.

புண்ணுக்கு மருந்து:

துத்தம், துரிசு, சமன் கொண்டு பொடித்து மம்மட்டி காச்சி யலுமிச்சம் பழச்சாறு அதில் விட்டு அதில் பொடி தூவி அதில் சிலாந்திப்பட்டை அரைத்திட்டு வழித்து வைத்துக் கொண்டு புண்ணிலிட சகல புண்ணும் பொறுக்கும்.

வயற்று கடுப்புக்கு:

நாவல் பட்டை இடித்து நாழி தண்ணீரில் காச்சி உழக்காக்கி, உழக்கு ஆட்டுப்பாலை விட்டு குடிக்க மூலக்கடுப்பும், வயறு கடுப்பும் தீரும்.

அ. வாலேந்திரம் தீர மருந்து:

முயல் காட்டம் சுட்டு, கரியெடுத்து தேங்காய் நெய்யில் சாலிச்சு மையெடுத்து கண்ணிலெழுதவும்.

நெடும்பாட்டுக்கு!

கஞ்சா பலம்-1, அபின் பலம் -2, பத்திரி பலம்-1/2 சாதிக்காய் பலம்-1, கோலாக்கு பலம் - 1, நல்ல சாணைக் கருவாடு சுட்டு வறுத்து அரைத்து

பொரித்து பசுவின் நெய்யாலும், தேனிலும் வெருகடி தின்னவும். கை கண்டது.

குழந்தைக்கு பேதி குளிகை:

வீரகாளி பட்டு சுட்டு சாம்பல் கூட்டிக் கொள்ளவும்.

அயமோதகம், அதிமதுரம், திரிபலா, கொத்தமல்லி, பாலி, கொடிப்பச்சை, மாசிக்காய், நற்சீரகம், கருஞ்சீரகம், நாயுருவி அரிசி, செந்நெல்கிளா நீரில் அரைத்து புத்தரிசி சுண்டைக் காயளவு திரட்டி முலைப்பால் தேய்த்து கொடுத்தாலும் பாலில் உரைத்து கொடுத்தாலும் கொள்ளாம் (நல்லது).

51. ஒதம் தீர:

~~களச்சிப்~~ கழற்சிப் பருப்பு உரித்து எடுத்து வறுத்து பொடித்து பத்து முட்டையால் கூட்டி வறுத்து உள்ளுக்குக் கொடுக்கவும். ஒதம் தீரும்.

வலிக்கு கிழி:

செய்தபடி இணைத்துக்குத் தயால மொன்று
செப்புகிறேன் வசம்புடனே வெள்ளை உள்ளி
உய்தமுள்ள நிலவேரும் முசிறு முட்டை
உறைப்பான தேனுடனே கோழி முட்டை
நெய்நாழி கூட்டி நிறையாக வைக்கக்
காலகோர் பலமாய் சேர்த்து
எய்யுகின்ற ஆமணக்கின் எண்ணெய் தன்னில்
இயல்பாக விட்டதிலே வடித்துக் கொண்டு

விட்ட தயிலத்துக் கிழியைக் கேளு
கூறான சுக்கிடித்து கிழியாய் கட்டி
தின்றுவிற துந்தியாலே ஒத்திப் போட
தீராத வலியெல்லாம் தீரும் பாரே//

அ. <u>சுரபூவாதி குளிகை:</u>

சூதம் கெந்தகம் நேர்வாளம்
சுக்கு மிளகு திப்பிலியும்
கோக்கல விதையும் பொரிகாரம்
கடிய திரிபலை ஒரிடைசரி
உண்டாய் கையாந் தகரைச்சாற்
றிலரை சிறிய சிறுபயறளவாக
திரட்டி குளிகை நிழலுலர்த்தி
செவ்வே யிஞ்சி முலைப்பாலில்
பிரச முடனே கொடுத்திடுகில்
பிணியும் சுரமும் தீர்வதுகேள்
பிசகா தென்று பிரித்துரைத்தார்
கொண்டசுரம் அறுபத்து நான்கும்
கொடிய சன்னி பதிமூன்றும்
அண்ட வாதம் எண்பதும்
அதிய சிலேற்பனம் தொண்ணூத்தாறும்
கண்ட பித்தம் நாற்பதும்
கடியபிணி பலதும் போம்//

௫௨. உள்ளுரோகம் கைந்தவாளிக்கு நெய்:

நறுநண்டி கிழங்கு சிறங்கை, மினாநைன்னம்பூ மிணுக்கு (கிளை) ஒன்று, நல்சீரகம் பலம்-1, கோட்டம் தேங்காய்ப் பாலில் மருந்தரைத்துக் கலக்கி உருக்கி கல்க்கம் 3-நாள் அசு நேரம் தின்னவும். நெய் ஒழியு மட்டும் ([illegible])(தீருமட்டும்) குடிக்கவும். உள்ளு ரோகம், கைந்தவாளி தீரும். ?

சூலைக்கும் பறங்கிக்கும், காலில் ஆணி புற்றுக்கும் திரி:

அரை களஞ்சி சாதிலிங்கமும், இரண்டு களஞ்சி பனங்காச்சி சுட்டு நேரகப் பொடித்து இரண்டு கூட்டவும். ஒன்றாகப் பொடியாக்கி 3- கண்டம் பழஞ்சீலையில் பரத்தித் திரி திரித்து தீ கொளுத்தி மூக்கில் ஏழு நேரம் புகை பிடிக்க பழைய சோறும், மோரும் கூட்டி உண்ணுக. பத்தியம் எல்லாம் தவிர்க்கவும். இது நல்ல புகை என்று அறியவும். கருத்த சூலைக்கு 9- நேரம் இழுக்கவும்.

அ. முருங்கைக் காயின் குணம்:

காணம் உறவெறிய முருங்கையிலை பலவும் பூவும்
காய் சமைத்து ஆங்காலம் அருந்தும் போது
வீணம் பெருகு விஷம் போகும் வீக்கம் போகும்
மேக எழட்டி பீலிகைபோம் குன்மம் போகும்
நாணம் பெருகும் சிறுப்புழுக் கல்லடைப்பன் போகும்
நயனங்கள் மிகத்தெளியும் நாடோரு காலம்
பூணம் வெறிய தாதுமிகச் சரீரம் நன்றாம்
புகழ்பெரிய காய வாதங்கள் போமே//

புழுக்கடிக்கு மருந்து:

கொச்சி மஞ்சள் அரைத்து தேய்த்து திருமிப் போட்டு நை வேளை யரைத்து பூசி ஒரு நாழிகை பொறுத்து கழுவிப் போடவும். இப்படி 3-நாள் செய்யவும். புழுக்கடி சமிக்கும்.

உஷ்ட்டிண சூரணம்:

பத்திய ஓமம் பதின் களஞ்சு
பாதிநல் சீரகம் அய்ங்களஞ்சு
தத்திய சுக்கும் அதிலப் பாதி
சாந்தக் கிராம்பும் அதிலப்பாதி
53. வைத்திய பத்திரி தான் பாதி
வெயிலிலுணத்தி பொடித்துடனே
தித்திய மாகிய தேனதிலே
சேர்த்து வெருகடி தின்றிடுகில்
மந்தாரத் ததியும் காயமுடன்
தோன்று மிருமல் சய ரோகம்
சத்திய நெஞ்சில் அடைப்புமுட்டும்
சார்ந்த குவளை உள் மாந்தை
சத்தும் இல்லாமலே தீருமென்று
தாரணி தன்னிலே மானிடர்க்கு
நிச்சிய மாக முனியுரைத்தான்
நீதி அவிசகம் தானாமே //
அட்டாங்க யோக முனியுரைத்தான்
இட்டமா உஷ்ட சூரணந்தான்
வெட்டா வெளியாகச் சொல்வதற்கு
விநாயகனே வந்து காத்தருள்வாய் /

அ. வாசுவுக்கு:

வெள்ளுள்ளி குடம் 30 எடுத்து, ஓமம் நாழி ஆண்டு மாறின பழங்கருப்பட்டி பாதி, முருங்கைப் பட்டை சாகம் உழக்கு, ஓமம் பொடித்து தினை வடிகொண்டு சாகத்தில் சேர்த்து உள்ளியும் இட்டு (வெகிச்சு) வேக வைத்து கருப்புக்கட்டியும் போட்டு பாகமாய்த் தீயெரித்து குழம்பாக்கி இறக்கி 18-நாள் 24-நேரம் தின்ன உப்பு, புளி தவிர்க்கவும்.

பலத்துக்கு:

முண்டக குறுவ மாவும், உளுத்தம் மாவும், சமன் கூட்டி உப்பில்லாமல் உரொட்டி சுட்டு தின்றுவர பலம் உண்டாம்.

பட்டை பலம் ஆறு மூன்றுநாலச் சீரகம்
பங்கிலக மின்தாளிசை பத்திரி கிராம்பு
கொட்டம் சிறு நாகப்பூ முக்கடுகோ டோமம்
கூறும் இலவங்கம் வகைசேரு முக்களஞ்சி
சட்டமொடு தாளிசைய சுத்தமிரு நாழி
சர்க்கரையோ டேழுபலம் தானதில் கலந்து
கிட்டமுடன் காயிந்து உசற்றுள் ஆய்ந்த பருவத்தில்
எடுத்திடித்த தன்னை இதிலத் தாவாக் கிண்டே //
எயகிலிதை காலப்படி நெய்கிளறியதை
இருபொழுதும் யிருவதுநா ளருந்து கிரால்
நெயில் பெறு மேகநீதம் உள்ளொளிவு சூலை
நெடுமண்டை சூலை சயம்
கேளுறு கிராந்திசாயல் சொறிகிட்டம் தாதுநட்டம்
ஆவா சத்தியொடு வாந்தி பத்திய இலேற்பனம்
~~செலேத்பனம்~~ பொயகதும் உப்பொடு புளிதவிர்த்தலே //

அ. துவாலை நிறுத்த:

பொன்னமிகச் சிலவறுக்கும் முன்மமத்தி லொன்று
பொருந்தவே மூன்றைமுத்தும் அஞ்செழுத்தாய்
தன்னிகரில்லாத்தே தழலிலிட்டு வைதுப்பித்தால்நீர்த்
திரளவை யோருதை யாதுக்கு கொடுக்கில்
பின்னுமொரு துயலைகுத்து பெரும்பாட்டைத் துலைத்தால்
பெண்ணோரே என்னையுமோ பித்தனென்று பேயே//

இதுக்கு விபரம்:

நல்ச்சாளை (மீன்) நாறு கொண்டுவந்து புளியன்
பொருக்க சுட்ட தழலில் புதைத்து சுட்டு முள்ளு
போக்கி அபின் பலம் - 1/4 கஞ்சா பலம் - 1/4 யாதெல்லாம்
நலிச்சாராயம் விட்டு அரைத்து கருப்புக்கட்டி
கொஞ்சம் கூட்டிச் சேர்த்து உண்டை செய்து
3 - நாள் ஆறு நேரம் ஒரு உண்டை விழுங்க
புளி விடவும். நல்ல கை கண்டது.

55. அ. கணைக்கு நெய்:

சுறாநெய் ஆடாரண்மை வைப்பாற்றி காயம்
நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் சமன்கூட்டி
அரைத்து நாழி நறுநெய்யும் சேர்த்துக் காச்சி மெழுகு
பருவத்தில் யிறக்கி பத்தியம் இல்லாதே ஒருபலாயளவு
நெய் இரண்டு நேரமும் சேவிக்க மாலைக்கண்,
தாமரை முள்ளு, கண்ணில்த் தீனம் (வியாதி)
தீரும். செய்து கை கண்டது.

புண்ணிற்கு அடைசுட்டு கட்ட:

முருங்கையிலை பறித்து அரைத்து தேங்காய் நெய்யால் அடைபோலே தட்டியிட்டு இலைக்கக் காச்சி வைத்து கட்ட எந்த புண்ணும் நாலு நாளையில் பொறுக்கும்.

அ. ஆனந்த வாயுவுக்கு, வாயுவுக்கு:

கொச்சிக் கொழுந்து எலுமிச்சம்காயளவு தேங்காய்ப் பாலிலே வெங்காய உள்ளியும் அரைத்து வேக வைத்து இறக்கி இரண்டு காசளவு நக்க தீரும்.

எலுமிச்சம்காயளவு எள், மிளகு அவ்வளவும் மஞ்சள் உக்கு பாலிலே கலக்கி கடுகு தெறிக்கிற பருவத்தில் வெந்து வடித்து ஒரு காசளவு நக்க வாயு தீரும்.

குன்மம் பெருவயிற்றுக்கு:

சுக்கு, அயமோதகம், கோரோசாணி, உலுவா, கடுகு, காயம், கடுக்காய், மஞ்சள், திற்பலி, சீரகம், யித்தனையும் கரியாமல் வறுத்து பொடி செய்து வெருகடி பிரமாணம் தின்ன வாயு குன்மம், பெருவயறு, இவை எல்லாம் தீரும்.

மூட்டு வலிக்கும், ஏனைக்கும்:

சீந்தித்தண்டு, சுக்கு யாதுஒரு அளவா எடுத்து குடிநீர் இட்டு குடிக்க வலி நீக்கும். நெருஞ்சிவேரை அரைத்து 3-நாள் கொடுக்க வலி நீக்கும்.

ஏனைக்கு: நாயுருவி வேரை அரிசியை நல்லெண்ணையில் அரைத்து கொடுக்கவும்.

56. முலைப்பால் சுரக்க:

குட்டித்தக்காளி வேரும், கீழாநெல்லிவேரும் எருமைப் பாலில் அரைத்து கொடுக்க பால் சுரக்கும்.

பொன்னாங்காணி வேர் கிரண்டு பாக்களவு அரைத்து தேங்காய்ப் பாலில் குடிக்க ஏறும்.

நீர்ச்சுருப்புக்கும், காமாலைக்கும்:

காமாலைக்கு பொடி, இரும்பு கிட்டம் பசுவின் கோமூத்திரத்தில் தட்டிப்போட்டு கொத்தான். ~~கொத்தான்~~ கொத்தான் கொழிஞ்சிச்சாறு, கையாந்தகரைச் சாறு, நாச்சியாளைப்பிடி. பேய்ப்பீர்க்கிலை, பிடி யாது எல்லாம் ஒக்க தட்டி கடப்போட்டு யாதுக்கு மருந்து, திரிகடுகு, கடுக்காய், இந்துப்பு யாவைகள் பொடி செய்து சேவிக்க காமாலை தீரும்.

delete

அ. பித்தத்துக்கு:

கருஞ்சீரகம், கார்கோலரிசி, விளாலரிசி, தாரம், மனோசிலை, கெந்தகம், மஞ்சள், இவைகள் பலம்-7 புளியாளைச்சாகம் கருக்குவாயிலைச் சாகம், எருக்கிலை, குப்பைமேனி இவை ஒக்க அரைத்திட்டு வைத்து இட மாறும்.

பித்தத்துக்கு மத்திப்பு:

கையாந்தகரை, கொடுப்பை, ஒரிலைத்தாமரை, வைப்பாற்றி, நெல்லிக்காய், இராமிச்சம் கடுக்காய், யாவை பசுவின் பால் விட்டு அரைத்துக் கலக்கி வைத்துப் தலையில் மத்திச்சு தாரைவிட மருந்து,

குறுந்தொட்டி வேர், லாமிச்சம், பாருவேலா பாது வகைக்கு பலம் - 1, இடித்து வெந்நீரில் போட்டுக் காய்ச்சி தாரைவிட. இப்படி 3- நாளிட.

முட்டை வெள்ளைக் கருவும், மிளகும் வறுத்து பொடி செய்து முட்டை வெள்ளைக் கருவும் விட்டு மத்திச்சு தலையாதும் மத்திச்சு (கிடக்க) படுக்கவிட்டு முன் சொன்ன தாரை விடவும். பித்தம், தலைமயக்கம் இவை தீரும்.

57. பித்தத்திற்கு தலையில் மத்திப்பு:

இலாமிச்சம், பாருவேலி, கடுக்காய், நெல்லிக் காய், தான்றிக்காய் வகைக்கு பலம் -1- ம் பாடித்து கருகொட்ட (கருக்கட்டை) வெந்நாம் வைத்து காஞ்சு வற்றி ஆறவிட்டு உறிகெட்டி வெந்நாம் தாரை விடவும். 3- நாள் பித்தம், தலைகறக்கம், நீர்த் தோசம், நிற்கும்.

தலை குத்துக்கு திரி:

கஸ்தூரி மஞ்சள், சித்தரத்தை, வசம்பு, திற்பலா, கருஞ்சீரகம், யிவையெல்லாம் பொடித்து சீலையில் தடவி திரிச்சு வேப்பெண்ணெயில் முக்கி தீயை கொளுத்தி அணைத்து புகை மூக்கில் பிடிக்க தலை குத்து நிற்கும்.

கற்பூரமும், குமிஞ்சாறும் முலைப்பாலில் உரைத்து வைதுப்ப நெத்தியில் போட தலை குத்து நிற்கும்.

அ. சன்னிக்கும், நடுக்கு சுரத்துக்கும் தயிலம்:

சன்னி நாயகம், தேவதாரம், பஞ்சவர்ண பழக்காய், கருஞ்சீரகம், வெள்ளுள்ளி, வகைக்கு பலம் - 2. வெள்ளுள்ளி உழக்கும், வாதமடக்கி, நொச்சி, தும்பையிலை, காஞ்சிரத்திலை, எருக்கிலை, வகைக்கு புடி யிடிச்சாறு உழக்கு, கோழிமுட்டை, நிலவேர் முசிறு முட்டை, முலைப்பால், உழக்கு முருங்கைப் பட்டை, முருக்கின் பட்டை, வேப்பெண்ணெய் உரி, இவை அரைத்து காச்சி வடித்துக் கொள்ளவும். சருவாங்கமும் போடவும். சன்னி, நடுக்கு சுரம் போகும்.

வாயு காற்றாவலம் ~~ஓ~~ பிடித்ததிற்கு:

வேப்பின் நெட்டு, கடுக்காய், பிரண்டைக் கிழங்கு, பிரண்டை யிடித்து சாறு பிழிந்து நன்றா யரைத்து குழம்பாக்கி வெண்ணெயிலே குழப்பி கொடுக்கவும்.

(குறிப்பு 58-ம் ஓலை காணப்படவில்லை)

59. இணமறிந்து கொடுக்கவும். புண், குஷ்டம், பலபல வியாதியும் தீரும். உப்பு, புளி பத்தியம் காக்கவும்.

சுர உண்டைக்கு:

யிரதம் பலம், ~~ர~~, சாதிலிங்கம் பலம் - 2, கெந்தகம் பலம் - 2, மனோசிலை பலம் - 2, அரிதாரம் பலம் - 2, அஞ்சு மருந்துக்கும் நேர்வாளம் கூட்டி கொள்ளவும். 3 - நாள் கையாந்தகரை சாகம்

விட்டரைக்கவும். இஞ்சிச் சாகத்தில் அரைக்கவும். கஸ்தூரி மணி-½, உண்டை பிடிக்கவும். சுரங்கள், காச்சல், வலித்துவலா, இட்டம், இவை பொறுக்கும்

ஈ.ளை யாருமல், காய சுவாதத்துக்கு (காயசுவாசத்திற்கு) நெய்:

ஆடாதோடை, கண்டங்கத்திரி, அதுவளை, குப்பைமேனி, தேள்க்கொடுக்கு, பொன்னாவரை, பிரமி, இசங்கு, சிறுவழுதலை, இராமுட்டி, இன்பூறல் (கிம்பூறல்), முருக்கிலை, பிராயிலை, இவ்வொன்று மூன்றுபடி சாகம் எண்ணெய் முந்நாழி உஷ்றி காய்ந்து இதுக்கு மேல் மருந்து திரிகடுகு, திப்பிலி, அத்தி, திரிபலா, கர்க்கடக சிங்கி, சிறுதேக்கு, வெட்பாலரிசி, விளாலரிசி, சித்தரத்தை, பேரரத்தை, யாத்தப்பு, சீனக்காரம், ஒரொன்று முக்கழஞ்சு அரைத்து கரைத்து பதத்தில் வடித்து நித்தம் முக்கழஞ்சு எண்ணெய் நக்க ஈ.ளை, யாருமல் காயசுவாதம் தீரும்.

மிளகு வறுத்து பொடித்துத் தூவி இடிக்கவும்.

ஈ.ளை யாருமலுக்கு ஆடாதோடை நெய்:

ஆடாதோடைச் சாறு இருநாழி, நெய் யாரு நாழி, செம்முள்ளி, கண்டங்கத்திரி, இவ்வொன்று இட்டு கியாயம் இட்டு எடுத்துக் கொண்டு திரிகடுகு, திப்பிலை, வெட்பாலரிசி, விளாலரிசி, திப்பிலி மூலம், அத்தி, திரிபலா, கடுகுரோகணி, கர்க்கடக சிங்கி, செவ்வள்ளி, கோஷ்டம், தாளிச பத்திரி

(குறிப்பு: 60-ம் ஓலை காணப்படவில்லை)

61. நல்லெண்ணை, பாங்கப்படாமல் சொறியாமல் delete பதத்தில் வடித்து மேல் பூசத் தாக்கும். பின்பு இளவெந்நீர் தன்னில் குளிக்கத் தருகாதே.

காமாலைக்கு குடிநீர்:

~~கீழ்க்காநெல்லிவேர், களஞ்சி,~~
கீழ்க்கா நெல்லி வேர்காஞ்சி
கிளர்போல்க் கடுக்காய் யருகளஞ்சி
தாளா மிரிசு கச்சோலம்
சத்தே புளித்த மோருடனே
நாளே ளாவும் நம்பி
இப்படி கொண்டு விடுதுதான்
போமே காமாலையும் சோகையும்
போகுமிதே.//

கணைக்கும், உள்ரு ரோகத்துக்கும் எண்ணெய்:

ஆமணக்கெண்ணெய் படி-1, சாத்திர பேதி பலம்-5, பொடித்து எண்ணெயில் இட்டு காச்சி வெத்திலையும் இட்டு வெத்திலை முறுகும் போது யிறக்கி ஒரு பலாயிலை அளவு குடிக்க கணையும் உள்ரு ரோகமும் இவை தீரும்.

அ. விக்கத்துக்கும், சுர காச்சலுக்கும் கஷாயம்:

அதிமதுரம், கடுக்காய், இந்துப்பு, நெல்லிக்காய், மஞ்சள், மாசக்காய், திற்பலி, செஞ்சந்தனம், ஆடாதோடை.

தாதுவளை, முசிறுமுட்டை, கண்டங்கத்திரி, எண்ணாழி தண்ணீர், உழக்காக்கி 3-நேரம் குடுக்க விக்கழ்வும் சுரமும் சமிக்கும்.

விக்கத்துக்கு பூச்சு:

வையாளாந்தப் பட்டை, மஞ்சள், வெள்ளை அரைத்து உருட்டி உலர்த்திவைச்சாகம். புளியன் பொறுக்க சாம்பல் விட்டு சத்தே சுண்ணாம்பும் போட்டு குழைத்துப் பூசி சாயங்காலம் பூவணிலை யும், பட்டையும், கொன்றையிலையும் போட்டு வெந்நீர் காச்சி வேது பிடிக்க விக்கம் தீரும்.

ஆனந்த வாயுவுக்கு:

எருக்கலம் கொழுந்து, தும்பைக் கொழுந்து ஒரு பிடி உப்பு ஒரு பிடி மருந்தும் அரைத்து 9 உண்டை திரட்டி நாளொன்றுக்கு ~~மாதவிடாயில் வயறுவலி உள்ள பேருக்கு~~

(குறிப்பு: 62-ம் எண் ஓலை காணப்படவில்லை)

63. மாதவிடாயில் வயறுவலியுள்ள பேருக்கு அரயால இத்தின பறித்து யாதுமிச்சாங்காயளவு மூன்றுநாள் பாலில் குடிக்க தீரும்.

மூலம் தள்ளினால்:

மூலம் தள்ளி முழுதும் மிகவரில்
மேல்வாசிக வாரியன் கொழுந் தவின் ~~சூசம்~~
ஒல மாக யரைத்து தயாரிலே
காலமே கொள்ள காணாது மூலமே//

வெளிறுக்கு மருந்து:

கோழிமுட்டை வெள்ளைக் கருவும், பசுவின் வெண்ணையும் கூட்ட மத்திச்சு 3-நாள் ஆறு நேரம் தின்ன வயறு வெவு தீரும்.

மூலத்தினு ஆவி காட்ட:

கீழ்க்காய் நெல்லி சமூலம் கொண்டு வந்து சதைச்சு ஒரு பானையில் போட்டு வெள்ளம் விட்டு கமுகின் பாளை கொண்டு கட்டி அவித்து வெந்தால் பாளையை வட்டமாய் அறுத்து மூலத்தில் ஆவி காட்ட தீரும் மூலம்.

சரீர பலத்திற்கு:

உணக்கலரிசி நாழி, உழுவாலரிசி உழக்கு, ஒரு நல்ல தேங்காய் பாலெடுத்து அதில் விட்டு வேக வைத்து வற்றி அரிசி நெருவெந்த (வேகின்ற)
அ. பருவத்தில் இறக்கி உழக்கு நல்லெண்ணையும், இரண்டு கோழி முட்டையும் கூட்ட விட்டு கிண்டி இறக்கி ஒரு பானை வண்டுகெட்டி வண்டில் வைத்து அவித்து தின்னுக. சரீரபலமுண்டாகும்.

சத்தடைத்து குரல் கட்டினால்:-

காலமே (காலையில்) ஒரு செந்தெங்கிளநீர் (செவ்விளநீர்) கொண்டு வந்து முகம் வெட்டி அதினுள்ளே இரண்டு கழஞ்சு திற்பலி (திப்பிலி) பொடித்திட்டு வைத்து சாயுங்காலம் திற்பலியை (திப்பிலியை) எடுத்து அந்த தண்ணீரில் அரைத்து கலக்கி குடிக்க.

இப்படி மூன்றுநாள் குடிக்க குரல் தெளியும்.

சகல கெர்ப்பவாயுவின் குணம், அதுக்கு மருந்தும்!

அடி வயத்திலே குத்தும், இருப்பு, கை கால் எல்லாம் ~~உளைவும்~~ உளைச்சல், முதுகுத் தண்டில் குத்தும், சிறுநீர் கடுக்கும்; தலை வலிக்கும். சன்னபாடி யிருமல் உண்டாகும். வயறு பொருமும், காந்தலும் உண்டாம். முகமும் கனக்கும். மாதவிடாயில்
64. வெள்ளையும் போகும். சரீரமெல்லாம் அடித்துப் போட்டது
நொறுக்கினாப் போலே இருக்கும்.

இதுக்கு மருந்து:

பசுவின் நெய், இருநாழிக்கு கற்கம், கோட்டம், அதிமதுரம், நல்சீரகம், கருஞ்சீரகம், அதிவிடையம், சாதிக்காய், பத்திரி, கிராம்பு, பச்சைக்கீ, சாத்திர பேதி, ஏலம், இலவங்கம், கச்சோலம், இந்துப்பு சந்தனம், கோரோசனம், ?பஞ்சிகன்னாரம்?, ~~தெ~~ தென்னம்பூ, கமுகின்பூ, தெத்திப்பூ, மாதளம்பூ, முருங்கைப்பூ, வகுவகை பூவும் வகைக்கு 5 பலம் எட்டுப்படி தண்ணீரில் ஊறவைத்து யெட்டொன்றாகக் காய்ச்சி நெய்யில் கலந்து மருந்தரைத்து கலக்கி சேத்து வைத்து மெழுகு பதம் வடித்து பரணியிலடைத்து தினம் மேல்பொடி போட்டு மாதவிடை வந்து குளித்த உடனே பத்துநாள் ௨ம பொழுது குடித்து உப்பு புளி தவிரவும். பிறகு 30-நாளைக்கு.

பிறகு பத்துநாள் குடித்து பிறகு மாதவிடை வாறதுக்கு அஞ்சாநாளைக்கு முன்னே 10 நேரம் குடித்து பிறகு மாதவிடை வந்தால் முழுகின பிறகு அஞ்சுநாள் குடித்து பிறகு மாதவிடை வந்து முழுகின உடனே புருசனும், பெண்சாதியும் நல்லொப்பு இருந்து உடனே கெர்ப்பந்தரிக்கும். இது கை கண்டது.

பிறகு இருவருக்கும் இளிக்க எண்ணெய்:

நல்லெண்ணெய் இருநாழி, அதிமதுரம் ஒரு பலம், கோஷ்டம் அரைப்பலம், மிளகு இரண்டு களஞ்சி எண்ணெய் காய வைத்து இறக்கின உடனே இந்த மருந்தை பொடி பண்ணி ~~தூவிக்~~ தூவிக் கிண்டி ஆறவிட்டு இரண்டு பேரும் முழுகிவர கெர்ப்பம் தரிக்கும். கெர்ப்பத்த வளர்க்கும். இது கண்டது சுல்த்தான் வயித்தியனாருடைய ஏட்டில் கண்டது.

65. கெர்ப்பப்புழுவை விழுந்து போக:

ஆமணக்கெண்ணெயில் ௩ ரெவெம்பகாயம் சரியளவு இட்டு காச்சி பொன்னிற பருவத்திலிறக்கி வடித்து (பூ) மாதவிடை வந்து ௩௦ நாள் சென்று ௰ நாள் ௩௦ பொழுது இரண்டு திட்டை இருவேளும் நெய் குடிக்க. மேட்டுப் புழு விழுந்து போம். மலடியாகிலும் பெறுவாள்.

கெர்ப்பந்தரிக்க மருந்து:

கெருடபச்சை கன்னாரு சாத்திரபேதி இது 3-ம் பொடி செய்து பசுவின் பாலில் வெருகடி போட்டு 3-நாள் 6 நேரம் குடிக்க புருசனும், பெஞ்சாதியும் குடிக்க கெர்ப்பந்தரிக்கும். இது கை கண்டது.

~~தலையில் தீர்விட்டு மோருஞ், சோறும் உண்ணவும்.~~

~~அ. வயறு கருப்பால் இரத்தம் விழுகிறதுக்கு:~~

அ. மூலமுளை வேதனைக்கு மருந்து:

→ ஆகாசத்தாமரை

(முட்டைப்பாசி) கொண்டுவந்து காடியில் அவித்து அந்த இடத்தில் வைத்து கட்டுகை. வேதனை தீரும்.

செறுநீர் அடைப்புக்கு:

பருத்திக் கொட்டை இடித்து இரண்டு சிறாங்கை சாறு கொண்டு ஒரு குண்டுமணியளவு நாளில் ஒருபங்கு

புரிய வில்லை [இரதம் அந்தச் சாகத்தில்] கூட்டி கொடுக்கவும். சிறுநீர் போகும்.

சிறுநீரடைப்புக்கு மருந்து:

மேல்படி வகைக்கு பூச்சு கோழிக்காரவும், நாய்குருப்பாம்பும், புங்கநெய்யும் மோரிலரைச்சு பூசவும். சிறுநீர் போம்.

சோகைக்கு மருந்து:

சிறுவழுதலை வேரைப் பிரங்கி ~~புங்கை~~ ஒரு யெலுமிச்சங் காயளவை அரைத்து கடல்தண்ணீரில் கலக்கி அந்தி சந்தி 3-நாள் குடிக்கவும். பால் கஞ்சி குடிக்கவும். சோகை தீரும்.

66. வெப்புப்பாவை, குன்மம் முதலானதுக்கு:

பேய்க்கும்மட்டிக்காய் போதப் பறித்து வைத்து யிடித்து முன்னாழி சாறுயெடுத்து சீலை வடிகொண்டு அந்த சாகத்தில் இருநாழி உப்பைக் கரைத்து தெளிய விட்டு எடுத்து வடித்து காச்சும் போது உரிமுழக்கு கோமூத்திரமும் விட்டு உள்ளி, சுக்கு, மிளகு, கடுக்காய் ஆழாக்கு விதம் பொடித்து சீலை வடிகொண்டு

கூடம் போட்டு காய்ச்சி நீரெல்லாம் வற்ற விட்டு
உப்பை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு வெருகடி
யளவு கரைத்து வெறும் வயிற்றில் கொடுக்கவும்.
வியாதி அத்து விடும். காணாக்கடி, வண்டுகடி,
சிரச்சி, கவுசி வாயு, வெப்புப்பாவை வியாதி பலதும்
தீரும். வயறு கழிந்தால் தண்ணீர் குடியாமல் தலையில்
நீர் விட்டு மோரும், சோறும் உண்ணவும்.

அ. வயறு கடுப்பால் இரத்தம் விடுகிறதுக்கு:

அசமோதகம், பச்சை பாதி, ~~புளியங்கல்~~ புழுங்கலரிசி பாதி வறுத்து
பொடி செய்து வெள்ளாட்டுப் பாலிலாகிலும், எருமைப்
பாலிலாகிலும், கொடுக்கவும். வயறு கடியால் இரத்தம்
விடுகிறது சமிக்கும்.

இளைச்சு போன உடல் பருக்க:

அரிவாளில் ஆவரை வேர்த் ~~கொவ்வை~~ ஒரு விளாம்பிகாயளவு
அரைத்து (கால் சின்னி) பசுவின் நெய்யில் வெந்து
அந்தி சந்தி கரண்டி நெய் நக்கி வரவும். குணம் கண்டு
delete இரண்டு நேரமும் ஆவது ஒரு நேரமாவது நக்கி வரவும்.
உடல் தெளியும்.

பெண் பிள்ளை துவாலைக்கு:

delete கம்பிளி சுட்டு வடி கொண்டு வென்னீரில் கொடுக்க
பெரும்பாடு நிக்கும்.

67.

67. பெருக்கால் பனிக்கு எண்ணெய்:

வில்வையிலை, பாலையிலை, காஞ்சிரத்திலை, ஆமணக்கிலை, அவுரியாலை, கைதோன்றி உரிவித் தாளி அரசிலை, அரளியாலை, நாச்செண்பகயாலை, இவை யடித்துச் சாறு எடுக்கப்படி ஒன்று, இருநாழி எண்ணெய் இருநாழி கற்கத்துக்கு திறிபலை, திரிகடுகு, இந்திரிக்கம், அதின் வேரு, குன்றிவேரு, காட்டுச் சுண்டைவேர், காட்டுமுல்லை வேர், வகைக்கு பலம் ௨௨. யிவையெல்லாம் கூட்டி அரைத்து எண்ணெயில் கலக்கி ஒருநாள் ஊறப் போட்டு காச்சி வடித்து பரணியில் அடைத்து தேய்த்து முழுகி வரவும். நீர் தோசமும், பனியும் மாறும். புளி தவிர்க்கவும். கை கண்டது.

அ. இருமலுக்கு புட்டவியல்:

தாறா வேர் ஒருபிடி, தூதுவேளை ஒருபிடி, குறுவை நெல்லரிசி உழக்கு யிவை கூட்டி யடித்து யசங்கிலை, ஆடாதோடையிலை, துளசியிலை, சாதிக்காய், நவரயிலை (கற்பூரயிலை) கூட்டி புட்டு சுட்டு தின்னவும். இருமல் தீரும். கைகண்டது.

வயறுகடி கிருமிக்கு மருந்து:

சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, சீரகம், அயமோதகம், உவா வகைக்கு ஒரு கழஞ்சு முசட்டை சமூலம் களஞ்சு ஆறு நானாவுரி வெள்ளம் வைத்து நாவுரி ஆக்கி காயவும், யாந்திப்பும், மேல்பொடி இட்டு, மூன்று நேரம் குடிக்க வயறுகடி, கிருமி யிவை தீரும்.

விசவாத குளிகை:

கருக்குவாயிலை, ஒருபிடி, சுக்கு, திற்பிலி, கருஞ்சீரகம், வகைக்கு பலம் கால், வெங்காரம் காஞ்சி ஒன்று சன்னிநாயகம் ஒருபிடி நாழி வெள்ளம் வைத்து உடிக்காக்கி அதில் அரைத்துப் பருத்திக் கொட்டை அளவு உண்டை பண்ணி நிழலுணர்த்தி பனிக்கும் சுரத்துக்கும் மிளகு கசாயத்தில் கொடுக்கவும்.

68. குன்மம், பெருவயறு, வாயு முதலானதுக்கு:

வெந்தயம் அம்மியால் வைத்து ஒன்றிரண்டாகப் பொடித்து தொலிபோக புடைத்துப் போட்டு பாத்திரத்தில் இரண்டு சேரு தண்ணீர் விட்டு கருப்புக்கட்டியை அந்தத் தண்ணீரில் கரைத்து அடுப்பேல் வைத்து கொஞ்சம் அனந்து வரும் பொழுது உழுவாயைக் கூட்டு போட்டு உழுவா வறுத்து மணம் எடுத்தால் இந்த மருந்து பொடி, வேர், ~~ஒன்றாகத் தூவி~~ ஒன்றாகத் தூவி ஆப்பக்கணை கொண்டு கிண்டி இமிஞ்சான் பலம்-1, கோர்க்கொம்பு பலம்-1, திற்பலி பலம்-1, கல்க்கண்டு பலம்-1, வெந்தயம் பலம்-1, சாதிக்காய் விராகனிடை-1, பத்திரி விராகனிடை-1, கிராம்பு விராகனிடை-1, பசுவின்நெய் சேரு 15 யிதெல்லாம் வெயிலில் வைத்து உலத்திப் பொடித்து தூவி பொடி எல்லாம் தீர்த்தின பிறகு நெய் விட்டு கிண்டி இறக்கி ஒரு பாக்களவு இரண்டு நேரமும் தின்ன பத்தியம் கசப்பு, புளிப்பு, பச்சை மீன் ஆகாது.

கருவாடு, முருங்கையிலை, அரக்கீரை, துவரம் பருப்பு மிளகு, உப்பு, வெந்தயம், யாதுகூட்டிக் கொள்ளவும். இதற்கு தீரும் வியாதி வயத்துவலி, குன்மம், மகோதரம் மந்தாரகாயம், உள்மாந்தை, உள்காச்சல், எதுப்பு ருக்கி, எதுத்துவாசு, எரிகுன்மம், வாயு, நீர்சுருக்குதல் மனக்குமட்டு, அக்கினி மந்தம் பசியும் உண்டாகும்.

69. புரவு சத்திரமிட்ட புண்ணுக்கு நெய்:

புளிக்கன் பால் உழக்கு, தேங்காய் நெய், உரி, அரக்கு ஆழாக்கு, தேன் மாகாணி, கார்கோலரிசி அதிமதுரம், கருஞ்சீரகம், துத்தம் துரிசு, வெம்பாடம், வெள்ளை இந்திரிக்கம், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு பலம் – ௨௨. எண்ணெயில் இட்டுக் காச்சி மெழுகு பருவத்தில் காச்சி வடித்து கொள்ளவும்.

கெற்ப சுரோணித வாயுவுக்கு:

ஆமணக்கெண்ணெய் உரி, குமட்டிக்காய் சாறு, இரண்டு படி, கடுக்காய் எட்டு இது இரண்டும் அரைத்துக் கலக்கி காச்சி வடித்து விடு தொடாமல் இருந்த அன்றும், அடுத்த நாளும், மூன்றா நாளும் குடிக்க கெற்பப் புழு கூட்டோடே விழும். இப்படி மூன்று விலக்கத்துக்கு குடிக்க பிள்ளை உண்டாம்.

அ. வதுவுக்கு ஞானி செட்டியார் வித்தை:

வெள்ளெருக்கம் பூ, நாழி மாத்திரம் கொண்டுவந்து நிழலுலர்த்தி இடித்து தெள்ளி ஈரக்குழலில் அடைத்து கொள்ளவும். ஒரு காசளவு பொடியும், ஒரு பச்சைப்

பாக்களவு சர்க்கரையில் சேர்த்து விளக்குவைத்தால்
தின்று பிறகு ~~சோறுக்கு~~, ~~கறியும்~~ ~~டினால்~~
சோறுண்கவும். கூ—டினால் ஒரு நாழிகை. நிக்கும்.
40-நாள் தின்ன வர்த்திக்கும். கழியாது. தம்பனமாகும்.

70. <u>பல் புத்துக்கும், பல் யோசினைக்கும் வாயில் கொள்ளு</u>
<u>வான் நெய்:</u>

தேங்காய் -3, வேப்பிலை பலம்-3, புங்கம் வேர் பலம்-3, இது இரண்டும் அரைத்து தேங்காய்ப் பாலில் வேக வைத்து எண்ணெய்ப் பருவமானால் உத்தமதாளிச் சாறு ஒரு சிரங்கை விட்டு நெய் வடித்து வாய் கொப்பளிக்க பல் புத்தும், பல் யோசினையும் சமிக்கும்.

<u>சுரத்துக்கு கசாயம்:</u>

இருந்திடவே யின்னமொரு கசாயம் சொல்வேன்
இயல்வான நிலவேரும் இஞ்சி உள்ளி
மடந்தயேரே கொத்தாமும் வேப்பின் நெட்டும்
வளமான நொச்சியிலை வுகிபிடியாய்க் கொண்டு
கிடந்ததொரு மருந்தெல்லாம் களஞ்சி விதம்
கெறுவாக தணித்து வாங்கி
செடந்தனக்கு தேன்கூட்டி உண்பீராகில்
செய்ய வெட்டுசுரஞ் சன்னிசுரம் சிலேற்பனவாதம்
வாதமொடு சன்னியெல்லாம் மாண்டு போகும்
வஞ்சகங்க ளில்லாமேல் மருந்து சொன்னேன்
போதமுடன் கண்டோனே நல்லோனாவான்
பொய்யொன்றும் சொல்லானலப் பொல்லாப் பாவி
போதமுடன் யிந்ததால் வெளியாய்ச் சொன்னேன்
வித்தையாலே வைகுவித்தை ஏக வித்தை
காதமல்ல அரமல்ல கிருப்பால் செய்து
கனதபெற்ற ஏ.சுரணாயி ருக்க லாமே //.

71. க்ஷய ரோகத்துக்கு முயல் கிருதம் :

அயல்காணும் முயலொன்று பிடித்து வந்து
அப்பனே கால்தலையும் குடலும் போக்கே
குடல்போக்கி நாலுபத்து பலவும் தாக்கி
குமுறவே இடித்தொரு பாண்டத்தி லிட்டு
அடன்மூன்று குறுணி செலவும் விட்டு
அப்பனே நாலொன்றாய் குறுக்கி நீயும்
விடுமே ஆடாதோடைச் சாறும் குறுணிவிட்டு
வெள்ளாட்டுப் பாலும் இருநாழி விட்டு
நடல்நறு நெய்யங்கே இருநாழி விட்டு
நாட்டிடவே மேல்மருந்து சொல்லுறேனே//

சொல்லுறேன் திப்பிலியும் தன்ன மூலம்
சுக்குடனே கற்கடகசிங்கி சித்திரமூலம்
சொல்லும்மாஞ் சிறுதேக்கு குறசாணி ஓமம்
செவியவும் சீரகமும் கிராம்பு தானும்
வெல்லுமாஞ் சடாமாஞ்சி கடுகு ரோகணி
மிளகுகோட்டம் இந்து வாலுளுவை அரிசி
அல்லிறவே முந்திரிகை யேலமில வங்கம்
அதிமதுரம் அரத்த அத்தி திற்பிலியும் தாக்கே//

தாக்கடா களஞ்சிரண்டு பாலி லாட்டி
சொல்லுவேன் வெருவகை யின்னாம் கேளு
ஆக்கமாம் பாதிரியும் கண்டங் காரி
அப்பனே சித்தமல்லி பேராமல்லி
தெக்கிடா கூடவளவும் நெருஞ்சி தானும்
செறுவழுதலை இவைகள் சமூலம் கூட
தாக்கடா தாதுவணை அமுக்கின் வேரு
இசங்கின் வேரும் திற்பிலியும் மிளகு பாரே//

பாரப்பா மஞ்சளொடு தேவதாரம்
பருவாத்தய் வகைக்கங்கே பலந்தான் மூன்று
72. சேரப்பா தண்ணீரில் தீயிட்டு நாலொன்றாய்க்
நாலொன்றாய்க் குறுக்கி வாங்கி
ஆரப்பா இவையெல்லாம் ஒன்றாச் சேர்த்து
அடுப்பேற்றிப் பூசைசெய்து அனலு மூட்டி
போரப்பா மூன்றுநாள் உ—— வைத்து
புகளான நாலாநாள் வடித்திடாயே//

வடித்துவைத்த நெய்யாலே களஞ்சி தாக்கி
மைந்தனே அரக்களஞ்சி தேனும் விட்டு
வடித்தமாயி திரிபிலமேலப் பொடியும் தாவி
பாங்காக உ—ம்பறிந்து இருநேரம் உ—டு
நொடிக்குமுன்னே நோய்களும் வச்சிர தேகம்
நுணுநுணுக்கம் தொண்ணூற்றாறு சயவும் தீரும்
கடித்தவாய் துடைத்தாப்போல் பிணிவின்னேகும்
கதளிகெந்த கிறுதங்க ளறையா றேனே//

அ. <u>நீரிழிவுக்கும், தாகத்துக்கும் கசாயம்:</u>

இந்த நாவல் கருவேலம் மாவு அத்தி, ~~கடலாஞ்சில்~~ கடலழிஞ்சில்
மாவிலங்கு, இலவங்கம் ஆலம்பட்டை, ~~அத்தி~~,
அரசி, ஆவரை, இருவை, இது வகைக்கு ~~ஒரு~~
~~பட்டை யாக~~ பலம்-3, திரிபலை வகைக்கு பலம்-3
இது ஒக்கத் தகர்த்து போட்டு பதக்கு நீர் விட்டு காய்ச்சி
நாலொன்றானால் உ—டிக்குத் தண்ணீர் அன்னத்தின்
மேலே கொள்ளவும். ~~நீரிழிவும்~~ நீரிழிவும், தாகமும் தீரும்.
யாது கை கண் —— து.

மேகத்துக்கு:

விடத்தலை இலை ஒரு எலுமிச்சம் காயளவு அரைத்து வெள்ளாட்டுக் கோமியத்தில் மூன்று பொழுது குடித்து பத்தியம் காக்கவும். சலப்பிரமியம், இரத்தப் பிரமியம், துன்மாமிசம், மேகநோவை, இது எல்லாம் ~~சுகிக்கும்~~ தீரும்

73. கருப்பிற்கும், சூலக்கிராணிக்கும் பொடி:

சாதிக்காய், கற்கடகசிங்கி, சீரகம், புளியங் கொட்டைத் தோடு, ஓமம் வெற்றரையெல்லாம் வறுத்து பொடி செய்து கொதி கஞ்சியில் கொடுக்கவும். வயிற்றில் கருப்பும், சூலக்கிராணியும் இவை தீரும்.

கெர்ப்ப வாயுவுக்கு ஆமணக்கெண்ணெய்:

ஆமணக்கெண்ணெய் உரி, நொச்சிச் சாறு உரி, தேங்காய்ப்பால் உழக்கு, சுக்கு, காயம், இந்துப்பு கடுக்காய், நமச்சாரம், வெள்ளுள்ளி, வாளம் யாது வகைக்கு பலம்-1, காட்டெருமைப்பால் ஆழாக்கு இலைக்கள்ளிப்பால் இரண்டு உழுப்போயாவட சாகத்தவிட்டு கடைமருந்து அரைத்து கலக்கி பாகம் விட்டுத் தீயெரித்து மெழுகு பதுவத்தில் இறக்கி வெள்ளி காசியளவு கொடுக்கவும். பின்னையுண்டாம். கெர்ப்ப சரோணித வாய்வும், குன்மமும் யாவை தீரும்.

அ. நீரிளிவுக்கு:

ஏ.ரரைக்கால் மரமஞ்சள் ஐ அரைக்கால் ஆவாவேர்-1
அரைக்கால் குழவிந்தம் ஒருவு கரு வேலம் பிசினும்
தேறரைக்கால் கடுகைரைக்கால் திரள யரைத்து தின்றால்
நீரரைக்கால் கெட்டுமிது நெருமொலாணை நிச்சயமே//

ஆனந்த வாயுவுக்கு; தலைக்கு எண்ணெய்:

வெள்ளமுந்திரியை பிடித்து சம்பா நெல்லரிசியால்
உரட்டி சுட்டு 3- நாள் ஆறு பொழுது தின்னக்
கை கண்டது.

சிவந்த கொடுவேலி வேரு பலம் 2, பத்துபடி
தண்ணீரில் யிடித்து பிழிந்து யருநாழியானால் எண்ணெய்
இருநாழியாக இறுக்கி பசுவின் வெண்ணெய் பலம்-1
நல்சீரகம் பலம்-1, அரைத்து கலக்கி எண்ணெயில்
சேர்த்து மணல் பருவத்தில் இறக்கி முழுகிவர விஷ
வாதம், அண்டவாதம், ஆனந்த வாயு, எந்திரவாத
இஷ்டம், சொறிதவைண், தலகெரந்தி, சொறி
கரப்பன் இவையெல்லாம் தீரும்.

74. செவியடைப்புக்கும், கபால வாயுவினும் எண்ணெய்:

இருவேலி பலம்-10, பத்தைடியகாழி வெள்ளத்
தில் இட்டு இருநாழியானால் நல்லெண்ணெய்
சேர்த்து கூட்டும் மருந்து கோட்டம் பலம்-5,
மிளகு பலம் -1/4, மணல்பருவத்தில் வடித்து தேச்சு
குளிக்கவும். செம்மறிக்காரி சுட்டு புளிந்து நீரு
செவியில் விட 3-நாள் ஆறுபொழுது செவி
கேள்க்கும்.

அ. காலில் சதைக்கும், ஆணிப்புத்துக்கும் மருந்து:

வெப்பாற்றி இலை, படவருதல், மரவெட்டி -15,
எலுமிச்சங்காய் -1, இதையெல்லாம் நல்லாப் பிழிந்து
சட்டியில் விட்டுக் காய்ச்சி தீவந்து வரும்போது
கற்தவும், துரிசும் பொடித்து கூடபோட்டு காய்ச்சி
குழம்பானால் சதையில் தொட்டுபோட்டுக் கொள்க.
ஆணிப்புற்றும், சதையும் பொறுக்கும்.

புண்ணுக்கு செருவா:

துத்தம், துரிசு, இரசம், இவை முலைப்பாலில்
அரைத்து சீலையிலூட்டி விரணத்தில் இடுக. பொறுக்கும்.

புழுக்கடிக்கு:

எலுமிச்சங்காய், காஞ்சரையிலை, காஞ்சர
பழம், பாவைச்சாறு, துத்தம், எலுமிச்சங்காய்,
பச்சை என்றால் சுட்டுக் கொள்க. காஞ்சரப்பால்
சுட்டு அரைத்து
(குறிப்பு: 75-ம் ஓலை காணப்படவில்லை)

76. பசுவின் பாலிலும், தேங்காய் பாலிலும் விட்டு
அரைத்து மூன்று நேரம் குடிக்க தீரும்.

ஆகாசத்தாமரை இலையும், சேனையும்.
நறுநறா அரிந்து மஞ்சளும்; நல்ல மிளகும்
கொஞ்சம் உப்பும் அரைத்து விட்டு அவித்து
கடைந்து 3- நேரம் தின்னுக. இரத்தம் பிடிக்கும்.

சந்நிதுக்கு (வாந்திக்கு):

7- விரல் நீளத்தில் பசுமிச்சம் நாரகத்தும், வடக்கு வேர் தொட்டுறியாடாமல் (வாய் பேசாமல்) பிடுங்கி தலைசுற்றி பரம்பின் அடியால் (பாயின்) ~~வைத்~~ யாட்டி நாளும் பேரும் சொல்லி இட்டு வைக்கவும். சந்நிது நிக்கும்.

தலைகுத்துக்கு:

குழியானை - ௳, பச்சரிசி - 101, அரைத்து தென்னம் குருத்தோலை இரண்டும் சேர்த்து பிடித்து அதின் உள்ளே வைத்து வெதுப்ப சென்னியில் (கன்னத்தில்) இடுக. தலைக்குத்து நிற்கும்.

அ. மண்டை சூலைக்கு நாசியில் விட நெய்:

தேங்காய் - 3 திருவினதும், எருக்கலம் பூ-7 முருங்கைப் பூவு ஒரு சிறங்கை புங்கன் வேர் இளைத்து சிறங்கை புளியன் கொட்டைத் தோடு சிறங்கை ஆடுதீண்டாப்பாளை ஒருபிடி அவுரி இலை ஒரு பிடி துத்தம், துருசு, பகாப்புற்று, சாலு குடிதாரம், வெம்பாடா அரிசிக 6-ம், கருஞ்சீரகம் நல்ச்சீரகம், வெள்ளை குந்திரிக்கம், மஞ்சள், ~~சுக~~ வசுகாவி, கிராம்பு, அதிமதுரம் வகைக்கு பலம்-1 பொடித்து எல்லாம் ஒன்றாகச் சேர்த்து தேங்காயில் இட்டு விரவி சூரியபுடம் வைத்து நெய்-பருவத்தில் மறு பாத்திரத்தில் ஆனாக்கு நசுநெய்யும் விட்டு அதிலே இந்த நெய்யும் புளி - -

(குறிப்பு: 77, 78-ம் எண் ஓலைகள் காணப்பட-
வில்லை)

79. ஏலாதி இளிகை:

வாசிக்கும் கன்னா ருளத்தில்
விசிக்கும் கோரோ சிணையும்
இராமிச்சம் நன்னாரி கோட்டம்
ஏலத்தொடு மேவும் அன்றில் புருகு
கமுகு முந்திரிகை அன்றில் இலவலிகமும்
மிகுந்த கலஸ்கொம்பும் முத்தக்காசு
பாரித்திரும் மதிரம் மோரித்திடு பாலின்றினை
பாவித்திதை நீயும் அரை காணக்கினி நீரில்
மாதளங்கனிந்த உகனிநீரில்வரை தேறாவ
வாகிபிறகே இளிகை நிழலுணத்தி வைப்பனவு
நோய்கள் நீக்கும் ஏலாதியே//

நீர் கோம்பினும், சந்திருக்கும் (வாந்திக்கும்) மருந்து:

வயளாதியானை பிடி, நொச்சியானை பிடி, வேப்பனை
பிடி, முருங்கை யானை பிடி, இது சமன் அரிந்து
கொஞ்சம் வெறுத்துப்பு ஓட்டிலிட்டு நன்றாய்
வறுத்து ~~த~~ தட்டிப் போட்டு (கொட்டிப் போட்டு)
பிறகு யாந்தயானை எல்லாம் ஒத ஒன்றாக போட்டு
சிவக்க வறுத்து கொட்டி காஞ்சு அந்த ஓட்டில்
நாழி வெள்ளம் விட்டு உழக்காணால் இரண்டு

நேரமும் குடிக்க நீர்க்கோர்ப்பு சமிக்கும். கிணற்று குளம் மண்ணும், அரியும் ஒன்றாக வறுத்து மண்ணை தள்ளி (எடுத்துவிட்டு) அரிசியை மட்டும் எடுத்து வெள்ளம் விட்டு அவித்து வெள்ளம் குடிக்கவும்.

ஆனந்த வாயுவுக்கு:

delete குடத்தும்பை, வேப்பின் கொழுந்து, முருங்கைப் பட்டை, கழற்சி கொழுந்து, கண்சிப் பருப்பு, வெள்ளுள்ளி [illegible]ம்-1, சுக்கு கணக்கு-1, குளவிந்தம் மஞ்சள் கணக்கு-1, இது வகைக்கு Vலம். எடுத்து ஆணுக்கு பெண், பெண்ணுக்கு ஆணின் சிறுநீர் விட்டரைத்து 3-நாள்.

(80-ம் எண் ஒலை காணப்படவில்லை)

81. பெருவயறுக்கு:

காணாங்கள்ளி வட்டுக்கு வேர் பிடுங்கி ~~பொடிவணக்கி~~ நிழலில் உலர்த்தி பொடி செய்து பாவையிலைச் சாறும், வெள்ளாட்டு மூத்திரமும் விட்டு குழைத்து அத்திக் காயளவு தின்ன பெருவயறு சமிக்கும். நீங்கும்

இந்த பொடி பாவையிலைச் சாற்றில் அரைத்து கோமியத்தில் குடிக்க பிள்ளையுண்டாம்.

வெளுப்புக்கு:

தேம்பாக் கொட்டை நாழி, கொத்தமல்லி நாழி, கருஞ்சீரகம் நாழி, வெள்ளுநாழி, கடுகுநாழி,

இதெல்லாம் ஒன்றாக யிடித்து அரைத்து பொடியாக்கி
12- நாள் தேனில் ~~சேவிக்கவும்~~ உட்கொள்ள. காணாக்கடி
முதலானது தீரும்.

வெள்ளைக்கு ~~தயிலம்~~ தைலம்

நீரொட்டிக்காய் இடைகனி - 6, காஞ்சிரத்தின்
விதை வீராகனிடை — 6, இரண்டு நாளின் வேர்,
கருப்பு முள்ளியும், நல்ல முள்ளி வேரு, ~~வெள்ளைக்காதல்~~,
வெள்ளைக்காதல், தேக்கின் காதல், சொருக்கு மடல்,
அ. சிரட்டை அஞ்சு யிதெல்லாம் சமனாக்கித் ~~தரித்து~~ வெட்டி,
குடத்தினகத்தில் ~~இட்டு~~ போட்டு குழித்தைலம் எடுத்து
மேலில் இடுக. நல்ல மாவின் பட்டை யிடித்து
2 இருக்கு இறக்க மேலால் பற்றிய வெளுப்பு தீரும்.

கிரந்திக்கும், சூலைக்கும் நல்லெண்ணெய்:

வெள்ளை கொடுவேலி வேர் ஒரு எலுமிச்சங்காயளவு,
அரைத்து தெங்கின் கருப்பட்டி நாலு ~~எலுமிச்சங்கா~~ எலுமிச்சங்காய்
அளவு அரைத்தருட்டி படி மிளகு உழக்கு அரைத்து
பொரிகாரம் பலம்-1, யிரதம் பலம் -½, யிதெல்லாம்
ஒன்றாக்கி நாழி நல்லெண்ணெயில் சேர்த்து ~~வெருக்கி~~ எரிக்க
பதமாகா வண்ணத்தில் யிறக்கி கற்கம் தின்கவும்.
எண்ணெய் சின்னியளவும், அவ்வளவு பழந்தண்ணி
யும் சேர்த்து குடிக்க கிரந்தியும், சூலையும்
தீரும்.

82. இரதம், களத்துவான்:

நல் கோவை யிலையை இடித்து புளிந்து உழக்கு சாகத்தில் கன்று போடாத எருமைக்கடாவின் சாணம் எடுத்து கலக்கி சீலை வைத்து அரித்து (வடிகட்டி) 3 நேரம் குடிக்க. சிறுநீரில் கலந்து போகும். நிச்சயம்.

பறங்கிப் புண்ணுக்குப் பொடி:

சங்கங் குப்பி வேரின் தோல் ஒரு பிடி அதன் கொழுந்து குருத்து இலை ஒரு பிடி அதினுடைய கொழுந்து சுள்ள இளங்கம்பு ஒருபிடி ஆகும் மூன்று பிடியும் எடுத்து ஒரு பானையில் 5 உழக்கு நீர் ஊற்றி மேலே வேடு கட்டி வேட்டின் மேலே இந்த மருந்தை வைத்து சட்டி கொண்டு மூடி ஆவி போகாமல் சீலைமண் செய்து தீயெரித்து அவித்து இறக்கி அதை எடுத்து உலர்த்தி பொடியாக்கி தேனில் குழைத்து ஒரு நேரம் நெல்லிக்காயளவு 3-உண்டை வீதம் 6-நாள் 12 நேரம் தின்னவும். பத்தியம் காத்து கொள்ளவும். பறங்கிப் புண் சமிக்கும்.

பறங்கி புண்ணுக்கு நெய்:

நல்லெண்ணெய் உழக்கு. தேங்காய் நெய் உழக்கு, சிவந்த கொடுவேலி வேரெடுத்து தோலையும், நரம்பும் நீக்கி சதையெடுத்து ஒரு பலமும், ஒரு நாள் எடுத்தம் சுண்ணாம்பில் தண்ணீர் விட்டு கலக்கி அந்த தண்ணீரில் போட்டு சுத்தி செய்து எடுத்து அரைத்து தைலம்,

துருசும், வெள்ளை குந்திரிக்கமும் வ வது பணத்தூக்கு வாங்கி பொடித்து எண்ணெயில் சேர்த்து காய்ச்சி மணல் பதவத்தில் இறக்கி 7 நாள் 14 - நேரம் ஒரு ரூபாயெடை அளவு குடிக்கவும். உ- நாள் நல்லருப்பும். மூன்றுக்கு குளித்து முறைக்குத் தீரும். இதுக்கு சோறு வறுத்து நல்ல மிளகும் நல்ல சீரகமும், நெத்திலிக் கருவாடும் வறுத்து பொடித்து வைத்து கூட்டிக் கொள்ளவும்.

83. <u>சவுக்கார எண்ணெய்:</u>

சவுக்காரம், இந்துப்பு, நவச்சாரம், பெருங்காயம், வெண்காயம், சமனாய் கூட்டி நேர்வாளம் 50- எடுத்து நஞ்சு போக்கி சுத்தி செய்து இவையெல்லாம் கூட்டி பொடி செய்து அரைத்து பானையில் நீர் விட்டு வண்டுகட்டி தேங்காய்ப்பூவும் வண்டின் மேலே தாவி மூடி அவித்து வெந்ததின் மேல் பால் பிழிந்து சட்டியில் விட்டு காய்ச்சி குழம்பாக்கி தின்ன, நெய் ஆக்கி குடிக்க விரேசனமாம். பத்தியம் கொள்ளவும். இது சர்வாங்க விரேசன மென்று சொல்லப்படும். நெய்யிது நெய் ஆக்கி குடிக்கவும் வேணும். இதுக்கு தீரும் வியாதி கொல்லும் குன்மம், உடல் வாதம், கொடிய சோகை, அட்ட சோகை, உள்ளே பிறந்த வலிங் கீதமுடனே பிறந்த மேக்கட்டும், பிள்ளை முதலாய் கரைத்தோடு மென்று முனைத்தார் பெரியோரே//

கொல்லும் குன்மம் குடல்வாதம்
கொடிய பிளவை அட்டபிளவை
உள்ளே பிறந்த வலங்கித
முடனே பிறந்த மலக்கட்டும்
பின்னை முதலாய் கரைந்தோடு
மென்று முரைத்தார் பெரியோரே.

தொடுத்த மகோதரம் பெருவயறும்
தோன்றும் வெப்பு பாவையறும்
வெளுத்த பித்தம் பாண்டுரோகம்
பிறவும் பிளவை குன்மங்கள்
குடித்த கஞ்சி சார்ந்திக்கும்.
குன்மம் பத்தும் போமெனவே
ஆமே உளதும் காமாலை
அனலாம் ஓதும் அடங்கும்பாரே.

(தொடர் ஏடு இலைகள் கிடைப்ப
வில்லை)

முடிந்தது.

இலக்கணப் பாடு, வெகுஜன சரியாத்து. புத்தகத் தொகை
தொகுத்துள் அச்சாக்கு வருகிறவை

ஸ்ரீ

ஸ.